ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2504 - 2026 අගෝස්තු මස 28 වැනි සිකුරාදා - 2026.08.28
2504 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2992 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 3000 |

**கவனிக்க.-** (i) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2026.08.21 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2026.08.21 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2989 - B 82825 (2026/08)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ்மொழியில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, ஓகத்து 17.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | மீகஹகியுல | மீகஹகியுல பிரிவின் பிறப்பு, இறப்பு மீகஹகியுல பிரிவின் விவாகம் (சாதாரண) பதிவாளர் பதவி (தமிழ்மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |
| பதுளை | பண்டாரவளை | பண்டாரவளை பிரதேச செயலக பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் (சாதாரண) பதிவாளர் பதவி (தமிழ்மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

08-292

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உள்ளடங்கலாக க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில் பிரிவிற்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, ஓகத்து 13.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | வெலிமடை | குருதலாவை பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

08-293

---

## இலங்கை பொலிஸ்

### துணைச் சேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி (ஆண் / பெண்)

### (துணைச் சேவைகளின் கீழ் மற்றும் மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில்)

இலங்கை பொலிஸ் துணைச் சேவைகளின் கீழ் மற்றும் மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் (அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிலிருந்து) பயிற்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஆண் / பெண்) பின்வரும் பதவிகளுக்குப் பின்தேர்ந்தெடுப்பதற்காக இலங்கைப் பிரசை களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) தகவல் தொழினுட்பவியலாளர் பதவி

(ஆ) கட்டிடக் கலைஞர்

(இ) கட்டட நிர்மாண கலைஞர் பதவி

(ஈ) மின் பொறியியலாளர் பதவி

(உ) கட்டுமானப் பொறியியலாளர் பதவி

(ஊ) தொலைத்தொடர்பு பொறியியலாளர்

02. www.police.lk என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசித்து, "Join us" என்ற விருப்பினைத் தெரிவுசெய்வதன் மூலம் அல்லது பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்து விண்ணப்பப் படிவத்தினுள் பிரவேசித்து, இணையவழி முறைமை ஊடாக மட்டுமே விண்ணப்பப் படிவங்களை பூர்த்திசெய்து 2026.09.30 ஆம் திகதிக்கு முன்னர்

சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு விண்ணப்பப் படிவமும் தபால் மூலம் அனுப்பப்படக்கூடாது. இணையவழி முறைமை ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை முதன்மைப் பரிசீலனைக்காக வருகை தரும்போது விண்ணப்பதாரர் எடுத்துவரல் வேண்டும். (அப்பிரதியில் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தினை இட்டிருத்தல் வேண்டும்.)

03. விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பது வரை தாமதிப்பதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமையையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

(அ) இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருந்தாமை அல்லது முரண்பாடு காணப்படின், சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது எனக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையில் பங்கெடுப்பது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்த தாகக் கருதப்படமாட்டாது.

(இ) இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் காணப்படின், அது தொடர்பான தீர்மானம் என்னால் மேற்கொள்ளப்படும்.

(ஈ) பதவியில் காணப்படும் வெற்றிடங்களின் அடிப் படையில் முன்னுரிமைக்கேற்ப ஆட்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படும்.

(உ) விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறும் வரிசைக்கிரமத்திற்கு அமைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும்.

04. **சம்பள முறைமை :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் படி இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள முறைமை ரூ. 82,150.00 – 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900 – ரூபா 195,970.00 ஆகும்.

சம்பளக் குறியீடு - SL 1 – 2025

சுற்றறிக்கையின் உப அட்டவணை III இன் படி 2026 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்படும் பகுதி ரூ. 74,438.00 ஆகும்.

2027.01.01 ஆம் திகதியில் செலுத்தப்படும் தொகை ரூ. 82,150.00 ஆகும்.

(அ) ஆரம்பச் சம்பளத்தில் 22% + ரூ. 1,250.00 கொடுப் பனவு

(ஆ) நிறைவேற்றுப் படி (அர.நி.சு.இல. 18/2015(V) இன் படி)

(இ) கடினப் பிரதேசக் கொடுப்பனவு - ரூ. 2,000.00

(ஈ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு - ரூ. 17,800.00

(உ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு - ரூ. 34,800.00 (பொலிஸ் மாஅதிபர் சுற்றறிக்கை இலக்கம் 2773/2024 இன் படி)

05. **அடிப்படைத் தகைமைகள் :**

5.1 **கல்வித் தகைமைகள் :**

**தகவல் தொழினுட்பவியலாளர் பதவி :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கணினி அறிவியல் அல்லது கணினி அறிவியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விஞ்ஞானமாணிப் பட்ட மொன்றைப் பெற்றிருத்தல்.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத் திற்குச் சமனான தகைமையாகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

**கட்டிடக் கலைஞர் / கட்டட நிர்மாண கலைஞர் பதவி :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பட்டய கட்டிடக் கலைஞர்கள் சங்கம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து 04 வருட முழு நேரக் கட்டிடக் கலைஞர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்திற்குச் சமனான தகைமையாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பட்டய கட்டிடக் கலைஞர்கள் சங்கம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழ்களைப் பெற் றிருத்தல்.

**மின் பொறியியலாளர் பதவி :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து தொலைத் தொடர்பு பொறியியல் அல்லது மின்னணுவியல் அறிவியலில் 4 ஆண்டு முழுநேரப் பட்டம்.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்திற்குச் சமனான தகைமையாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

**கட்டுமானப் பொறியியலாளர் பதவி :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து 04 வருட முழு நேரக் கட்டுமானப் பொறியியல் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்திற்குச் சமனான தகைமையாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

**தொலைத்தொடர்பு பொறியியலாளர் பதவி :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து 04 வருட முழு நேரத் தொலைத்தொடர்பு பொறியியல் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்திற்குச் சமனான தகைமையாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து, அதற்குரிய செல்லுபடியாகும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

5.2 **தொழில்சார் தகைமைகள் :**

மின் பொறியியலாளர் / கட்டுமானப் பொறியியலாளர் பதவி / தொலைத்தொடர்பு பொறியியலாளர் பதவி

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் இணைந்த உறுப்புரிமையை பெற்றிருத்தல் அல்லது பூரண உறுப்புரிமையை பெற்றிருத்தல்.

**தகவல் தொழினுட்பவியலாளர் பதவி :**

கணினி மென்பொருள் அல்லது கணினித் தரவுப் பொறித்தொகுதி அல்லது கணினிப் பிணையப் பொறித்தொகுதி அல்லது கணினித் தடயவியல் ஆகிய பாடத்துறைகளுள் ஏதேனுமொரு துறைக்கு அமைவாகக் கணினிப் பொறியியலாளராகப் பணியாற்றியிருத்தல்.

**கட்டிடக் கலைஞர் / கட்டட நிர்மாண கலைஞர் பதவி :**

பட்டய கட்டிடக் கலைஞர்கள் சங்கத்தின் இணைந்த உறுப்புரிமையை பெற்றிருத்தல் அல்லது பூரண உறுப்புரிமையை பெற்றிருத்தல்.

5.3 **தொழிற்றுறை அனுபவம் :**

மின் பொறியியலாளர் / கட்டுமானப் பொறியியலாளர் / கட்டிடக் கலைஞர்/ கட்டட நிர்மாண கலைஞர் பதவி / தொலைத்தொடர்பு பொறியியலாளர் பதவி

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், குறைந்தபட்சம் மூன்று வருட காலப் பகுதிக்கு உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

**தகவல் தொழினுட்பவியலாளர் பதவி :**

கணினி மென்பொருள் அல்லது கணினித் தரவுப் பொறித்தொகுதி அல்லது கணினிப் பிணையப் பொறித்தொகுதி அல்லது கணினித் தடயவியல் ஆகிய பாடத்துறைகளுள் ஏதேனுமொரு துறைக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணினிப் பொறியியலாளராகக் குறைந்தபட்சம் மூன்று வருட காலத் தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5.4 **உடற்தகைமைகள் (அனைத்துப் பதவிகளுக்கு மானது):**

I. தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், இப்பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் பொருத்தமான உடற் தகைமையையும் உளத் தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

II. **ஆண்கள்** - உயரம் 5 அடி 6 அங்குலத்திற்குக் குறையாமலும், தோள்பட்டை வரையிலான மார்பளவு 32 அங்குலத்திற்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

**பெண்கள்** - உயரம் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(சிறப்புத் தகுதிகள் மற்றும் நிபுணத்துவம் கொண்ட விண்ணப்பதாரர்களின் விஷயத்தில், தலைமை ஆய்வாளரின் விருப்பப்படி இந்த உயர மற்றும் மார்பளவு வரம்புகளில் இருந்து விலக்கு அளிக்கப்படலாம்.)

III. **பார்வை பற்றிய தேவைகள்** : > கண்ணாடி யுடனோ அல்லது வில்லைகளுடனோ அல்லது அவைகளின்றியோ பார்வைத் திறன் குறைந்த பட்சம் 6/6 மற்றும் 6/12 ஆகவும், நிறப் பார்வை சாதாரணமானதாகவும் இருத்தல் வேண்டும்.

5.5 **ஏனையவை**

5.5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

5.5.2 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸ் துறையினால் எதிர்பார்க்கப்படும் நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

5.5.3 திருமணமானவர் அல்லது திருமணமாகாதவர் ஆகிய இருசாராரும் விண்ணப்பிக்கலாம்.

5.5.4 தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

5.5.5 ஆண் அல்லது பெண் ஆகிய இருசாராரும் விண்ணப்பிக்கலாம்.

5.5.6 செயற்கையான உடலியல் மாற்றங்களைச் செய்திருக்கக் கூடாது. (உதாரணம்: பச்சை குத்தியிருத்தல்).

5.5.7 பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான 5.1 முதல் 5.6 வரையிலான தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதியன்று அத்தகைமைகள் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5.6 **வயது** :

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது 25 - 45 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

06. **ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் முறைமை :**

கட்டமைந்த நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையிலும், பின்னணி பற்றிய பரிசீலனையில் நற்சான்றுகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மற்றும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களுக்காகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6.1 **கட்டமைந்த நேர்முகப் பரீட்சை :**

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான அம்சங்கள்* | *உச்ச புள்ளி* | *தெரிவு செய்வதற்குப் பரிசீலிக்கப்படும் குறைந்தபட்சப் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 01 மேலதிக கல்வித் தகைமைகள் | 30 | பொருத்தமற்றது |
| 02 சேவை அனுபவம் | 30 | |
| 03 மேலதிக மொழி அறிவும் கணினித் திறனும் | 20 | |
| 04 தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 10 | |
| 05 நேர்முகப் பரீட்சைக் குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

07. **பின்னணி பற்றிய பரிசீலனை :**

7.1. ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காகத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் நற்பண்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர்களது பின்னணி பற்றிய பரிசீலனை நடாத்தப்படும்.

7.2. விண்ணப்பதாரரின் நற்பண்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர் மற்றும் அவரது நெருங்கிய உறவினர்களினதும், அவருடன் நெருக்கமாகப் பழகுபவர்களினதும் நற்பண்பு, நடத்தை என்பன தொடர்பாகப் பரிசீலனைகள் நடாத்தப்படுவதுடன், பாதகமான பின்னணிப் பரிசீலனை அறிக்கைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் ஆட்களைச் சேர்த்துக்கொள்ளலில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

குறிப்பு: நெருங்கிய உறவினர்கள் சம்பந்தமாக எந்தவொரு குற்றவியல் பதிவுகளும் இருத்தல் ஆகாது. நெருங்கிய உறவினர்கள் என்பது விண்ணப்பதாரரின் தாய், தந்தை, பாதுகாவலர்கள், சகோதர சகோதரிகள் மற்றும் சகோதர சகோதரிகள் திருமணமானவர்களாயின் அவர்களின் துணைவியர்/கணவன்மார் ஆகியோரும் நெருங்கிய உறவினர் களாகக் கருதப்படுவர்.

7.3. ஆட்களைச் சேர்த்துக்கொள்ளலின் போது விண்ணப்பதாரர்கள் போலியான தகவல்களை வழங்குதல் அவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியீனமாக அமையும். போலியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை ஆட்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் வெளிப்படுமாயின் வழங்கப்பட்ட நியமனம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

08. **மருத்துவப் பரிசோதனை :**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பொலிஸ் வைத்தியசாலையின் பணிப்பாளர்/வைத்தியர் உள்ளிட்ட மருத்துவக் குழுவினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மேலும், இதன்போது விண்ணப்பதாரர்கள் பொலிஸ் கடமைகளுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக உடற் தகைமை மற்றும் உளத் தகைமைப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். பொலிஸ் வைத்தியசாலையின் பணிப்பாளர்/வைத்தியரினால் மருத்துவப் பரிசோதனையின் அறிக்கைகள் 'சுகாதாரம் 169' படிவத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மருத்துவப் பரிசோதனையில் சித்தியடையாத விண்ணப்பதாரர்கள் மேன்முறையீடு செய்ய முடியாது.

09. **பயிற்சியளிப்பு :**

பின்னணி குறித்த பரிசீலனையிலும் மருத்துவப் பரிசோதனையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுள் திறமைப்பட்டியலுக்கு அமைவாக அதிகபட்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படும் திகதியொன்றில் பயிற்சிக்காக அழைக்கப்படுவர். இப்பயிற்சி இலங்கை பொலிஸ் கல்லூரியில் வழங்கப்படும்.

10. **நியமனத்துக்கான நிபந்தனைகள் :**

இப்பதவி ஓய்வூதியமற்றதாகும். நீங்கள் அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். செலுத்தப்பட வேண்டிய தொகை அரசாங்கத்தினால் அவ்வப்போது பிரகடனப்படுத்தப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

I. தாபனவிதிக் கோவை ஏற்பாடுகள், நிதிப் பிரமாணங்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறை சேரிச் சுற்றறிக்கைகள், பொலிஸ் கட்டளைகள், இலங்கைப் பொலிஸ் துறைக் கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல் கோவைகளின் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

II. பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இலங்கைப் பொலிஸ் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்த உடனே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாகச் செயற்படுவதாக உறுதி மொழி / சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

12. **விண்ணப்பப் படிவம் :**

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது, விண்ணப்பதாரர்கள் வெள்ளை நிறப் பின்னணியில் பெறப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான வர்ணப் புகைப்படமொன்றையும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளையும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;

(ஆ) தேசிய அடையாள அட்டை;

(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்;

(ஈ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்;

(உ) தொழில்முறைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்;

(ஊ) அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்;

(எ) நீங்கள் அரசாங்க சேவையிலிருந்து அல்லது ஆயுதப் படைகளிலிருந்து விலகியிருப்பின், அவ்வாறு விலகியமைக்கான கடிதம் (விடுவிப்புக் கடிதம்).

13. ஏற்கனவே அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்டு தற்போது சேவையாற்றிக்கொண்டிருக்கும் விண்ணப்பதாரர்கள், தங்களது விண்ணப்பப் படிவத்தினைச் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பப் படிவத்தின் உப-இலக்கம் 18 இன் கீழ் உள்ள பின்வரும் மாதிரிக்கு அமையத் தயாரிக்கப்பட்ட கடிதமொன்றை நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரையுடன் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு. …… ………………………………………………….. அவர்கள், …………………………………… திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / இராணுவப் படையணியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் என்பதையும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

.........................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
பெயர்: ................................
திகதி: ................................
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

குறிப்பு – பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித பயணச் செலவுகளோ அல்லது ஏனைய செலவுகளோ இலங்கைப் பொலிஸ் துறையினால் வழங்கப்படமாட்டாது .

பிரியந்த வீரசூரிய
பொலிஸ் மா அதிபர்.

08-304

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியில் நிலவும் 80 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2025.09.28 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாத 35 வயதினை விஞ்சாத இலங்கையின் ஆண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2026.09.28 ஆகும். இப் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் அட்டவணை ஒன்றில் (01) காட்டடப்பட்டுள்ளன. விண்ணப்ப பத்திரத்தின் மேல் தலைப்பானது இந் நகர இலக்க அட்டவணைப்படி நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பித்த நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஆயினும், போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத நகரங்களில் விண்ணப்பதாரிகள் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர். எவ்வாறாயினும் உத்தேசிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது அதிக எண்ணிக்கையான பரீட்சை நிலையங்களை நிறுவுவது தொடர்பில் போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை விண்ணப்பிக்காத போது பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**1 ஆவது அட்டவணை**

**பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள்**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகலை | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்நறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினப்புரி | 24 |
| கேகாலை | 25 |

01. **விண்ணப்பம் கோரப்படும் பதவி** :

புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் தரம் III

02. **பதவியில் கடமையின் தன்மை :**

இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத என்ஜின் சாரதி/ புகையிரத என்ஜின் சாரதி (ஷன்டின்) ஆகியோரின் கடமைகளுக்கு உதவியளிக்கும் வகையில் புகையிரத இயக்கம் எனும் விடயம் தொடர்பில் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவிக்கென கையளிக்கப்பட்டுள்ள கடமைப் பட்டியலுக்கமைய கடமைகளை மேற் கொள்ளவர்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

MT 1-2025 ரூ. 50,090.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 1010 -10 x 1190 - ரூ. 84,420.00

(அ. நி. சு. 10/2025 இன்படி சம்பள மாற்றங்கள் செய்யப்படும்.)

04. (அ) **கல்விசார் தகைமைகள் :**

(சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறே தேனும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தி யுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள் :**

மூன்றாம் மட்ட மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 21/2 வருட தொழில்நுட்ப பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழினை பெற்றிருத்தல்.

(இ) **உடற்சார் தகைமைகள் :**

i. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமை புரிவதற்கும் தேவையான உடல் மற்றும் உள தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

ii. உயரம் குறைந்தபட்சம் 05 அடி 04 அங்குலம் இருத்தல் வேண்டும்.

iii. 6/6, 6/6 கண் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள்** :

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

iii. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கும் தகைமை உள்ளது.

iv. 18 வயதிற்கு குறையாத 35 வயதினை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

(1991.09.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பிறகு பிறந்தநாள் கொண்டவர்கள் மற்றும் 2008.09.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன் பிறந்த நாளை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.)

குறிப்பு.- விண்ணப்ப அறிவித்தலில் கோரப்பட்ட இறுதி திகதியான 2026.09.28 ஆந் திகதிக்கு மேற்கூறிய அனைத்து தகைமைகளையும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு செய்யும் முறைமை :**

மேலே (04) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்காக திறந்த எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு, அவ் எழுத்து மூல பரீட்சையில் சித்தியடைகின்ற விண்ணப்பதாரிகளுள் பொது நேர்முக பரீட்சை தொடர்பில் அழைக்கப்படும் எண்ணிக்கை புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படுவதோடு, அங்கு ஆட்சேரப்பு திட்டத்திற்கமைய வெளியிடப்பட்ட இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா மற்றும் உடல் ரீதியான பொருத்தப்பாடு காணப்படுகிறதா எனவும் பரீட்சித்து பார்த்து விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கை தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இங்கு காத்திருப்பு பட்டியல்களில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

06. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சை நடைமுறைமை :**

i. **பரீட்சை முறை :**

(அ) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறும்.

(ஆ) அனைத்து வினாத்தாள்களுக்கும் மேலே (04) இன் கீழ் கோரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ii. **பரீட்சையின் பாடங்கள் :**

தொழில்நுட்ப அறிவு - காலம் 02 மணித்தியாலங்கள், 100 புள்ளிகள்
தேர்ச்சியடைவதற்கான புள்ளிகள் - 50 புள்ளிகள்.

iii. **விதந்துரைக்கப்பட்ட பாடப் பரப்பு :**

புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியில் கடமைப்பாடுகளுக்கு சமாந்தரமாகுமாறு இயந்திரோபகரண மற்றும் அவற்றின் பாவனை தொடர்பான அடிப்படை அறிவு பரீட்சிக்கப்படும்.

iv. **தெரிவு செய்யும் முறைமை :**

இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்று சித்தியடைகின்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்படும். இந் நேர்முக பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்ப கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை நிறைவு செய்துள்ளமை தொடர்பில் பரீட்சிக்கப்படல் மற்றும் உடல்சார் தகைமைகள் பரீட்சித்து பார்த்தல் மாத்திரம் நடைபெறும். ஏற்புடைய தகைமையை நிறைவு செய்திருந்தால் எழுத்து மூல பரீட்சையில் பெறும் புள்ளிகளின் திறமை முறைமைக்கமைய விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

v. **பரீட்சை பெறுபேறுகள் :**

வர்த்தமானி அறிவித்தல் 06 (v) பந்திக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்ப

தாரிகளின் முழு புள்ளிகளின் திறமைக்கமைய தயாரிக்கப்பட்ட பட்டியலானது புகையிரத பொது முகாமையாளரிடம் வழங்கப்படும். பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அறிவிக்கப் படும்.

07. **பரீட்சைக் கட்டணம் :** ரூ. 1200.00 ஆகும். இக்கட்டண மானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொது முகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல. 176-100129027-313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கபப்பட்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் நகல் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்) பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

08 விண்ணப்பமானது இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப் பட வேண்டுமென்பதுடன் அனைத்து விண்ணப்பப் படிவங்களும் A4 அளவிலான தாளில் விண்ணப் பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையான தலைப்புகள் முதலாவது பக்கத்திலும் 07 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை 3 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பமானது தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனிக்கவும், இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட தட்டச்சு/ இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக்கப்படலாம். மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதால் விண்ணப்பத்தினை முன் வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா மற்றும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஓட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரீசிலித்து பார்க்க வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஏற்புடைய பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(அ) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற எதிர் பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத் தினை நிரப்ப வேண்டும். விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப் பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள் விண்ணப்பத்தில் சிங்கள் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும்.

(ஆ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.09.28 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை 2026" என குறிப்பிடப்பட வேண்டும். அத்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
நியமனக் கிளை,
த. பெ. 355,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(இ) விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை தொடர்பிலான நுழைவுச்சீட்டில் விண்ணப்பதாரியின் கையொப் பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத் தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய உத்தியோகத்தரொருவர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவியினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

(ஈ) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் தபாலிடுகையில் விண்ணப்பமொன்று தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்தி கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே இது குறித்து அறிவித்தலொன்று பத்திரிகைகளில் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி அல்லது 3 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு

கிடைக்கப் பெறவில்லையெனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு தெரிவிக்கையில் விண்ணப் பித்த பரீட்சை விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரியாயின் மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியினை அனுப்பி வைப்பதன் பொருட்டு உமது தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தின் ஊடாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும். மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு விண்ணப்பதாரியினால் தங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பத்தின் பிரதி செலுத்திய பரீட்சை கட்டணத்திற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தினை தபாலிடு கையில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றினை கைவசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்.

09. **பரீட்சைக்குதோற்றல் :**

(அ) விண்ணப்பகோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எண் ணக்கருவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் விண்ணப் பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சை கட்டணத்தினை செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும். தமது நுழைவுச்சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கு தோற்று வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய நுழைவுச் சீட்டில் கையொப்பத்தினை உறுதி செய்து கொண்டு பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளிலேயே அதன் மண்டலாதிபதி யிடம் பொறுப்பளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறபேறுகளை வழங்குதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அவ்விதிகளை மீறினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டணைக்கு உட்பட நேரிடும்.

**குறிப்பு :** விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றவோ அல்லது பதவியொன்று தொடர்பில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாகவோ ஏற்றுக் கொள்ளவதாக கருதப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள் ளெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நொடியில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாது இருத்தல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் III தரத் திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற இவ் உத்தி யோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி யிலிருந்து மூன்று (03) மாத பயிற்சி காலத்திற்கு கீழ்படிந்து புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியில் கடப்பாடுகளுக்கு ஏற்புடைய பிரயோக மற்றும் கோட்பாட்டு ரீதியான பயிற்சி வழங்கப்படும்.

12. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்த னைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத்தை கொண்டது. ஏற்கனவே விதவைகள் மற்றும்

அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்கு பங்களிப்பு செய்பவர் எனின். தொடர்ந்தும் அதற்கு பங்களிப்பு நிதியினை செலுத்த வேண்டும்.

(ii) நியமனம் தொடர்பில் தகைமையினை பெற்ற மொழி மூலத்திற்கமைய 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேரான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்புடைய அரசகருமமொழி தொடர்பில் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தாபனக்கோவையில் மற்றும் நிதி பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நடைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமையவும் கீழ் படிந்து சேவை செய்ய வேண்டும். அவ்வாறே காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள் தொடர்பில் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு கீழ் படிந்து சேவையாற்ற பொருந்தியுள்ளீர்.

13. (i) இவ் ஆட்சேர்ப்பு தொடர்பில் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

(ii) நுழைவுச்சீட்டொன்று வழங்கப்படுவது இப் பதவி தொடர்பிலானதொரு தகைமைகயாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக கருதப்படக் கூடாது.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பிலான இறுதி தீர்மானத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளருக்கே உள்ளது.

(iv) இவ் அறிவித்தலானது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற தன்மை காணப்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**ரவிந்திர பத்மபிரிய,**
புகையிரத பொது முகாமையாளர்.

(இதற்கமைய A-4 கடதாசிகளில் இருபுறத்தையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பூரணப்படுத்துவதற்கு முன்னர் விண்ணப்ப கோரல் அறிவித்தலினை வாசித்து நன்றாக புரிந்துக்கொள்ள வேண்டும்.)

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் பதவியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

**Open Competitive Examination For Recruitment For The post of Railway Engine Driver Assistant Grade-III, Sri Lanka Railway Department-2026**

[ ]
அலுவலக பாவனைக்காக

பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பித்த மொழி மூலம்

சிங்களம் -1 [ ]
தமிழ்-2
(குறித்த எண்ணை கூட்டினுள் எழுதுக)

| பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கின்ற நகரம் | நகரம் | நகர எண் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பத் தெரிவு | | |
| 2 ஆவது விருப்பத் தெரிவு | | |
| பரீட்சை அறிவித்தலின் ஆரம்ப பந்தியினை பார்க்கவும். விண்ணப்பித்த நகரினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | | |

1. முழுப் பெயர்:

i. சிங்களத்தில்/ தமிழில் : ..................................................................................................................................

ii. ஆங்கிலத்தில் : ..................................................................................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :

   i. சிங்களத்தில்/ தமிழில் : ........................................................................................................................................

   ii. ஆங்கிலத்தில் : ........................................................................................................................................

3. நிரந்தர முகவரி:

   i. சிங்களத்தில்/ தமிழில் : ........................................................................................................................................

   ii. ஆங்கிலத்தில் : ........................................................................................................................................

4. பெண்பால் /ஆண்பால் :

   i. பெண் - 1

   ii. ஆண் - 0 ☐

   (குறிந்த எண்ணை கூட்டினுள் எழுதுக.)

5. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

6. வதிவிடம் :

   i. கிராம அலுவலர் பிரிவு : .................................................................. அதன் இலக்கம்: ☐

   ii. பிரதேச செயலக பிரிவு : ..................................................................

   iii. மாவட்டம் : ..................................................................

7. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

8. 2026.09.28 ஆம் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. தொலைபேசி இலக்கம் : 1. ☐☐☐☐☐☐☐☐☐☐

   Whatsapp 2. ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்விசார் தகைமைகள் :

   i. க. பொ. த. (சா. தரம்)

   பரீட்சை இலக்கம் : .......................................... ஆண்டு : .........................................................

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *பெற்றுக்கொண்ட சித்தி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

ii. தொழில்சார் தகைமைகள் :

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

11. நீங்கள் என்றேனும் ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?

(குறித்த கூட்டினுள் "X" அடையாளத்தை இடுக.)

ஆம் ☐ இல்லை ☐

12. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை அறியத்தருகின்றேன். இதில் ஏதேனும் பகுதியினை பூர்த்தி செய்யாதிருத்தல் தவறாக மற்றும் பொய்யாக பூர்த்தி செய்திருத்தல் போன்ற காரணங்களினால் என்னுடைய விண்ணப்பம் நிராகரிப்பு செய்யப்படுவதற்கான காரணங்களாக அமையும் என்பதை நன்கு அறிவேன் அதனால் ஏற்படும் நட்டத்தினை நான் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்கிறேன்.

(ஆ) மேற்கூறிய (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை என நான் பதவியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இணங்குவேன் என்பதையும் அறியத்தருகின்றேன். அதனால் ஏற்படும் நட்டங்கள் எதும் இருப்பின் அவற்றை நான் தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(இ) இப் பரீட்சையின் நிபந்தனைகளை பின்பற்ற இணங்குகின்றேன்.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு நான் கீழ்படிவதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) நேர்முக பரீட்சை நடாத்துவது தொடர்பில் புகையிரத பொதுமுகமையாளரினால் விதிக்கப்படுகின்ற விதிகளுக்கு நான் கீழ்படிவதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊ) 2026 ......... ஆம் திகதி ................ வங்கியின் ....................... கிளைக்கு ரூ. 1,200.00 ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

.............................................................
திகதி : ................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள தேசிய ஆளடையாள அட்டை ...............................................இலக்கத்தினையுடைய திரு. ................................................................... அவர்களை தனிப்பட்ட ரீதியில் நான் அறிவேன் என்றும் அவர் இன்றைய தினம் என் முன்னால் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ...................................
பதவி : ...................................
முகவரி : ...................................
திகதி : ...................................

14. **திணைக்கள/நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்தல் (அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக) :**

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள திரு. .............................................. அவர்கள், ..................................................... .............. திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. ஆம் திகதி முதல் ......................... வரை .................... ........... ஆக சேவை செய்துள்ளார். அவருக்கு எதிராக முடிவுறாத ஒழுக்காற்று நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டுள்ளது/ அறிக்கையிடப்படவில்லை. அவரது வேலை, நடத்தை மற்றும் வரவு மகிழ்ச்சிகரமானது/ மகிழ்ச்சிகரமற்றது. குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தியிருப்பதையும் அப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டிருப்பதையும், அவர் புகையிரத திணைக்களத்தில் புகையிரத என்ஜின் சாரதி உதவியாளர் III ஆம் தரத்திற்கு தெரிவு செய்யப்படுமிடத்து இத் திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

...........................................................
திணைக்கள/ நிறுவன பிரதானியின் கையொப்பம்.

திகதி : ...................................
உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ...................................
பதவி : ...................................
முகவரி : ...................................
(தயவு செய்து உத்தியோகபூர்வ இலட்சினையை பொறிக்கவும்.)

08-296

---

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

01. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.donets.lk இணைத்தளத்தின் “Our Services'' கீழுள்ள “Online Applications – Recruitment Exams/ E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (Online) மூலம் மட்டுமே சமர்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.09.25 ஆகும்.

**குறிப்பு-** நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2026, ஓகத்து மாதம் 31 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2026, செத்தெம்பர் 25 ஆம் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

இப்பரீட்சை அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டும் நடாத்தப்படும். சகல விண்ணப்பதாரிகளும் அவ்வட்டவணையின் படி பரீட்சைக்குத் தோற்ற எதிர்ப்பார்க்கும் நகரத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்ற எதிர்ப்பார்க்கும் நகரம் மற்றும் அதற்கான நகர இலக்கத்தை அட்டவணை II இன் படி சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படுகின்ற எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

03.

(அ) வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

**குறிப்பு** : இந்த ஆட்சேர்ப்பு மூலம் அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிலவும் அமைச்சுகள்/ திணைக்களங்கள்/ ஆணைக்குழுக்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதுடன், இப்போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்படும் சேவை நிலையத்திற்கு கடமைக்காக சமுகமளிக்கக் கடமைப்பட்டுள்ளனர். நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர், ஒதுக்கப்பட்ட சேவை நிலையத்தை திருத்தம் செய்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

(ஆ) அரசாங்க சேவை நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1840/34 மற்றும் 2013.12.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ளஅல்லதுஇதன்பிறகுசெய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் தினத்தன்றான அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு செயலொழுங்குவிதிகளும், உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(இ) நியமனத்திற்காக தெரிவு செய்யப்படின், முதலாவது சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் கட்டாயம் சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்ற செய்ய அவசியமாயின், அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(ஈ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத் திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங் களுக்குள் சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப் பிட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) நியமனத்திற்காக தெரிவு செய்யப்படின் நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமையை பூர்த்தி செய்த மொழியின்படி 2020.10.16ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதன் இடைநேர் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தங்களால் அரசகரும மொழித் தேர்ச்சியைப் உரியபடி பூர்த்தி செய்தல் வேண்டும்.

04. 2025.03.25 ஆம் திகதிய இலக்கம் 10/2025 இனைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் சம்பள குறியீடு MN 02-2025 இப் பதவிக்கு உரித் தாவதுடன் அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 48,470.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 – ரூபா 82,800.00 ஆகும். நியமனத்துக்காக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிக்கு அச் சம்பளம் உரித்தாவது 2027.01.01ஆம் தினத்திலிருந்தாகும். நியமனம் செயற்படும் தினத்திலிருந்து உங்களுக்கு இச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

05. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும்.

06. **தகைமைகள்:**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடைய வையாகும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2008.09.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.09.25 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்களாவர்).

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்த வொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் மொழி (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

2. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு :

i. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்), பரீட்சையில் திறமைச் சித்தி பெற வேண்டியுள்ள மொழியாக கருதப்படுவது விண்ணப்பதாரி இப் போட்டிப் பரீட்சைக் காக தோற்றும் மொழி ஊடகமாகும்.

ii. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) மற்றும் கல்வி பொது தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சைக்கு சமனான வேறு, தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோன்றி நியமனம் பெறுவதற்கான தகைமையினை வழங்குவதற்கான உரித்தாக்கல் தொடர்பில் இறுதித் தீர்மானம் உரிய கல்வி நிறுவனங் களின் மற்றும் பரீட்சை ஆணையாளரினால் உறுதிப்படுத்தியதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

**கவனத்திற்கு :** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2026.09.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

07. **மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்.**

மாவட்டப் பெயர்ப் பட்டியல், அட்டவணை - I இல் காட்டப்பட்டுள்ளது. வெற்றிடங்களுக்குப் போட்டியிடுவதற்குத் தெரிவுசெய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கம் என்பவற்றை அட்டவணை - I இற்கு இணங்க நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தில் சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப் படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாவட்டத்திற்குமான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் குறிப் பிட்டதொரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்ப வேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அம்மாவட்டத் திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே போட்டியிட முடியும்.

I. ஏதேனும் மாவட்டமொன்றுக்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங் களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அவ் வெற்றிடங்களின் எண்ணிக்கை அருகிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மத்தியில் அம் மாவட்ட மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் மீளப் பகிரப் படும்.

II. நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சிறிதளவாக இருப்பின், அக்காரணத்தின் அடிப்படையில் மாவட்ட சனத்தொகையை அடிப்படையாகக் கொள்ள முடியாத விடத்து, திறமை ஒழுங்கில் தகுதி யானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

III. பரீட்சையில் தேவையான குறைந்தபட்ச புள்ளிகளைப் பெறும் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட குறைவாக இருக்குமிடத்து மாவட்ட சனத்தொகையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படமாட்டாது.

**கவனிக்க** - மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பதன் பொருள், அந் நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகைக்கு விகிதாசாரமாக அம் மாவட் டத்தில் போட்டிப் பரீட்சைக்கு தோன்றும் விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படும் வெற்றிடங்களின் அளவு என்பதுடன், அந் நிர்வாக மாவட்டத்திற்குள் நிலவும் அரசாங்க தாபனங்களில் காணப்படும் சேவை வெற்றிடங்களின் எண்ணிக்கையல்லவென கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) மாவட்டத்தைச் சேர்ந்தவராக கருதப்படுவதற்குக் காணப்பட வேண்டிய தகைமைகள் - மாவட்ட மொன்றின் வெற்றிடங்களுக்கு போட்டியிடுவ தாயின் பின்வரும் விடயங்களில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

I. விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்;

அவ்வாறில்லாதவிடத்து

II. பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருட காலத்தில் அம் மாவட்டத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்;

அவ்வாறில்லாதவிடத்து

III. அவர் தொடர்ச்சியாக 05 வருடங்கள் அம் மாவட்டத்தில் தனது பாடசாலை இடைநிலைக் கல்வியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு :

1. எழுத்துப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் அல்லது கேட்கப்படும் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் மேற்குறித்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் பின்வரும் ஆவணங்களை உரிய விதத்தில் சமர்ப்பிக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

I. பிறப்புச் சான்றிதழ்

II. கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான வதிவைக் உறுதிப்படுத்தும் வாக்காளர் இடாப்புப் பெயர்ப் பட்டியல்

III. மாணவர் செயலாற்றுகைப் படிவம்

2. எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் தந்தை அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் இடமாற்றம் செய்யப்பட முடியுமான அரசாங்க சேவையை வகிப்பார்களாயின் அவ் விண்ணப்பதாரி தனது தந்தையின் அல்லது தாயின் பிறந்த இடத்தை தனக்குரிய மாவட்டமாகத் தெரிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும். (அதற்காக விண்ணப் பதாரர் தனது பெற்றோரின் பிறந்த இடத் தையும் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் சேவையாற்றுவதையும் உறுதிப்படுத்துவதற் கான ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிப்பது அவசியமாகும்.)

3. எந்தவொரு விண்ணப்பதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் பதவி வெற்றிடங் களுக்காகப் போட்டியிடுவதற்கு அனுமதிக் கப்படமாட்டார்கள். நிகழ்நிலை விண்ணப் பத்தினை சமர்ப்பிக்கும் போது மேற்படி 07(ஆ) குறிப்பிடப்படும் தகைமைகளின்படி தாம் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு மாவட்டத்தினை தெரிவு செய்ததன் பின்னர் அதனை மாற்ற முடியாது.

08. இப்போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% ஆனது அங்கவீனமுடைய நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறும் அங்கவீனமுடைய விண்ணப்பதாரர்களுள் அதிக புள்ளிகளைப் பெற்ற 3% சதவீதத்தினர் மாத்திரம் திறமை ஒழுங்கின் பிரகாரம் நேர்முகப்பரீட்சைக்காக தெரிவு செய்யப்படுவர். இதற்காகத் தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்தது நாற்பது சதவீதத்தையாவது (40%) பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது ஐம்பது சதவீதத்தையாவது (50%) பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 27/88 இன் ஏற்பாடுகள் அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரித்தாகும்.

அங்கவீனமுடைய ஆட்களுக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து, நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள், தகைமைகளைச் பரீட்சிக்கும் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு மேலதிகமாக மருத்துவப் பரிசோதனைச் சபையிடமும் சமர்ப்பிக்கப்படுவதுடன், மருத்துவப் பரிசோதனைச் சபையினால் அங்கவீன விண்ணப்ப தாரர் அல்லவென்றோ அல்லது அங்கவீன அடிப் படையின் கீழ் நியமனம் வழங்கப்படுவதற்குத் தகைமை பெறமாட்டார்கள் என பரிந்துரைக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் நியமனத்திற்குத் தகைமை பெற மாட்டார்கள் என கருதுங்கள்

**குறிப்பு :** இப்பரீட்சைக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 27/88 இன் விதிகளுக்கமைய விசேடத் தேவைகளைக் கொண்ட விண்ணப்பதாரரொருவர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் விசேட வசதிகள் அளிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரரொருவர் தோற்றுவாராயின், அது பற்றிய விபரத்தை நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது கட்டாயமாக குறிப்பிட வேண்டும் என்பதுடன், அது தொடர்புடைய மருத்துவ சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அங்கவீனரல்லாத ஒருவர் தவறான முறையில் அங்கவீனர் எனக் குறிப்பிடக்கூடாது.

09. **பரீட்சை நடைமுறை:**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமது தனக்குரிய ஒரு மொழிமூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என் பதுடன் பரீட்சைக்குரிய அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் அம்மொழிமூலத்திலேயே விடை யளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாப் பத்திரங் களைக் கொண்டிருக்கும்.

| | | *புள்ளிகள்* | *காலம்* |
|---|---|---|---|
| 01 | மொழி யாற்றல் | 100 | 2 ½ மணித்தி யாலங்கள் |
| 02 | உளச் சார்பு | 100 | 1 மணித்தி யாலம் |

(01) **மொழியாற்றல்:**

பரீட்சார்த்திகளின் கருத்துக்களை வெளி யிடுதல், கிரகித்தல், எழுத்துக்களின் பிரயோகம், மொழியும் மற்றும் கட்டுரையும், கொடுக் கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படியத் தயாரித்தல், கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்டவணைகளையும் தயாரித்தல், கொடுக்கப்பட்ட பந்தியை

சுருக்கி எழுதுதல், கொடுக்கப்பட்டுள்ள பல வாக்கியங்களின் கருத்தை தனி வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கணப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களைக் கொண் டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.

(02) **உளச்சார்பு:**

இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரிகளின் கணக்குத்திறன், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொதுவான நுண்ணறிவு போன்ற வற்றை அளவிடும் விதத்தில் கேள்விகளைக் கொண்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வகையிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு:** கடமை நோக்கங்களுக்காக விண் ணப்பதாரர்களின் தகைமைகளையும் ஆற்றல் களையும் பரீட்சிக்கக்கூடிய இவ் வினாப் பத்திரம் தயாரிக்கப் படும்.

(ஆ) இப் போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் பெற தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளின் கீழ் ஆகக் குறைந்தது நாற்பது வீதமேனும் (40%) பரீட்சார்த்திகள் பெறுதல் வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஐம்பது வீதமேனும் (50%) பெறுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் பிரகாரம் பெற்ற புள்ளிகளின் ஒழுங்குவரிசை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(இ) **பரீட்சையின் பெறுபேறுகள்** : பரீட்சைப் பெறு பேறுகள் - இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கப்பாட்டின் மீது, எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்பட்ட புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகளைக் குறிப்பிட்ட பெறுபேற்றுப் பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வெளியிடுவ தற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நட வடிக்கை எடுக்கும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள் :**

i. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாகவும், சரியாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதி யற்றவர் எனத் தெரியவருமாயின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

ii. பரீட்சார்த்தியொருவரின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பின்னர் தவறானதென தெரியவரு மாயின் அல்லது அவர் வேண்டுமென்றே ஏதேனும் விடயத்தினை மறைத்துள்ளார் என தெரியவரு மாயின்அவருக்குதொடர்ந்தும்நியமனம்வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், இப்பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனமொன்றினை இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவையிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பதற்கு உட்படும்.

11. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்காக விண்ணப்பிப்ப தற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத் தினை (Common Instructions) தரவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக் கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையி னூடாக சமர்ப்பிக்கப்படும் மென்பிரதியை செல்லுபடியான பிரதியொன்றாக இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்படவில்லையென கட்டமைப்பிற்குள் உள் நுழைய பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூல மாகவோ அறிவிக்கப்படும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை கட்டமைப்பினூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டண செலுத்துகை முறையின் கீழ் மட்டும் கொடுப்பனவினை செய்தல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)

ii. எந்தவொரு வங்கியினதும் வரவட்டை மூலம் (Any Bank Debit Cards)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம்/ Flex செயலி மூலம் (Bank of Ceylon Online Banking Method/ Flex App)

iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளி னூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு : மேற்கூறப்பட்ட முறைமையின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படும் முறைமை தொடர்பில் ஆலோசனைகள் இணையத் தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதென குறுந் தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் (Email) மூலம் அறியத்தரப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுப்பணமும் செலுத்த வேண்டியதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற் குறிப்பிட்ட கொடுப்பனவு முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சை திணைக்களம் பொறுப் பாகாது.

(iv) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்த வொரு காரணத்திற்காகவும் மீள செலுத்த/ வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

(v) விண்ணப்பதாரிகள், விண்ணப்பங்களை சமர்ப் பிக்க இறுதி திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு எதிர்மறை விளைவு களையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில் விண் ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ் நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்படும்.

(vii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படுவதுடன், விண்ணப்ப தாரர்களுக்கு குறுந்தகவல் ஒன்றின் ஊடாகவும் அறிவிக்கப்படும் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சை யின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், தொடரிலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப் படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியினை தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமான தாகும்.

(viii) அனுமதி அட்டையைப் பரிசோதித்து மாற் றங்கள் ஏதும் இருப்பின் இலங்கைப் பரீட் சைகள் திணைக்களத்தை அழைத்து, விண் ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏற்ற வகையில் குறித்த திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப்பரீட்சையின் போது திருத்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் வேண்டு கோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ix) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண் ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப் படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத் தரினால், ஏனைய விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாடசாலை யொன்றின் அதிபர் / ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தரினால், பிரிவின் கிராம அலுவலரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத் தரணியால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படையின்அதிகாரம்பெற்றஉத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்தமத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிடத்தக்க அந்தஸ் தினைக் கொண்ட ஒருவரின் மூலமாகவோ சான்றுரைப்படுத்தப்படல் வேண்டும்.

(x) பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந் தொழுகுதல் வேண்டும். அச்சட்டங்களை மீறின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திக்கு ஆளாகவேண்டி ஏற்படும். பரீட்சைப் பெறு பேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மான மாகும்.

12. **பரீட்சைக்கு உள்வாங்குதல் :**

(அ) பரீட்சைக்கு தோன்றும் விண்ணப்பதாரிகள் பரீட் சைக்குக் தோற்றும் நாளில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப் படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சாத்தியொருவர் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சாத்திகளும் பின்பற்ற வேண்டிய சட்டக்கோவையொன்று இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு :** விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குதலானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படக்கூடாது

13. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப் படுத்தக் கூடியவாறு முகத்தினை மறைக்காது மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இருகாதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

15. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல உரையே வலுவுள்ளதாகவிருக்கும்.

என்.யு. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, ஓகத்து 19.

**அட்டவணை - I**

மாவட்டப் பெயர்ப்பட்டியல் மற்றும் இலக்கங்கள்

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலனறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

**அட்டவணை - II**

பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | | மருதானை | 02 |
| | | பொறளை | 03 |
| | | கறுவாத் தோட்டம் | 04 |
| | | பம்பலப்பிட்டி | 05 |
| | | ஹெவ்லொக் டவுன் | 06 |
| | | நுகேகொடை | 07 |
| | | மொரட்டுவ | 08 |
| | | பிலியந்தலை | 09 |
| | | ஹோமாகம | 10 |
| | | மகரகமை | 11 |
| | | ஹங்வல்ல | 12 |
| | | அவிசாவளை | 13 |
| 02 | கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | | மினுவாங்கொடை | 15 |
| | | திவுலப்பிட்டிய | 16 |
| | | வெயாங்கொடை | 17 |
| | | கம்பஹா | 18 |
| | | ஜா-எலை | 19 |
| | | வத்தளை | 20 |
| | | களனி | 21 |
| | | தொம்பே | 22 |
| 03 | களுத்துறை | ஹொரணை | 23 |
| | | பாணந்துறை | 24 |
| | | களுத்துறை | 25 |
| | | மத்துகமை | 26 |
| | | அளுத்கமை | 27 |
| 04 | கண்டி | கண்டி | 32 |
| | | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | | தெல்தெனிய | 34 |
| | | வத்தேகமை | 35 |
| | | நுகவெலை | 36 |
| | | கலகெதரை | 37 |
| | | கம்பளை | 38 |

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 05 | மாத்தளை | மாத்தளை | 28 |
| | | கலேவளை | 29 |
| | | நாஉளை | 30 |
| | | லக்கலை -பல்லேகம | 31 |
| 06 | நுவரெலியா | ஹெந்துனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வதுமுல்லை | 41 |
| | | ஹட்டன் | 42 |
| | | கினிகத்தேன | 43 |
| 07 | காலி | அம்பலாங்கொடை | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகம | 46 |
| 08 | மாத்தறை | வெலிகம | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புறுப்பிட்டி | 49 |
| | | ஹக்மனை | 50 |
| | | தெய்யந்தர | 51 |
| | | திக்குவல்லை | 52 |
| | | அக்குரஸ்ஸ | 53 |
| | | கொட்டபொல | 54 |
| 09 | அம்பாந்தோட்டை | பெலியத்த | 55 |
| | | வலஸ்முல்ல | 56 |
| | | வீரக்கெட்டிய | 57 |
| | | தங்காலை | 58 |
| | | அம்பலாந்தோட்டை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸமஹாராம | 61 |
| 10 | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பளை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |
| 11 | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12 | வவுனியா | வவுனியா | 69 |
| 13 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 14 | கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | | பளை | 125 |

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 15 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | | ஏறாவூர் | 76 |
| | | காத்தான்குடி | 77 |
| 16 | அம்பாறை | அம்பாறை | 78 |
| | | சேரங்கடை | 79 |
| | | கல்முனை | 80 |
| | | அக்கரைப்பற்று | 81 |
| | | சம்மாந்துறை | 82 |
| 17 | திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | | திருகோணமலை | 71 |
| | | மூதூர் | 72 |
| | | பதவி பராக்கிராமபுர | 73 |
| | | கிண்ணியா | 74 |
| 18 | குருநாகல் | குளியாப்பிட்டி | 87 |
| | | பிங்கிரிய | 88 |
| | | நாரம்மல | 89 |
| | | பொல்கஹாவலை | 90 |
| | | குருநாகல் | 91 |
| | | இப்பாகமுவ | 92 |
| | | தொடங்கஸ்லந்த | 93 |
| | | மொரதிஹ | 94 |
| | | நிகவெரட்டிய | 95 |
| | | மாஹோ | 96 |
| 19 | புத்தளம் | வென்னப்புவை | 83 |
| | | மாதம்பே | 84 |
| | | சிலாபம் | 85 |
| | | புத்தளம் | 86 |
| 20 | அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | | கெக்கிராவை | 98 |
| | | அநுராதபுரம் | 99 |
| | | கலென்பிந்துனுவெவ | 100 |
| | | கஹடகஸ்திகிலிய | 101 |
| 21 | பொலன்னறுவை | பொலன்னறுவை | 102 |
| | | ஹிங்குரக்கொடை | 103 |
| 22 | பதுளை | பண்டாரவளை | 104 |
| | | வெளிமடை | 105 |
| | | பதுளை | 106 |
| | | பஸ்ஸரை | 107 |
| | | மஹியங்கனை | 108 |
| | | கிராந்துருகோட்டை | 109 |
| | | ஹஸலக | 110 |

| | *மாவட்டம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| 23 | மொணராகலை | பிபில | 111 |
| | | மொணராகலை | 112 |
| | | வெல்லவாய | 113 |
| 24 | இரத்தினபுரி | ஹெலியகொடை | 118 |
| | | இரத்தினபுரி | 119 |
| | | பல்மடுல்லை | 120 |
| | | பலங்கொடை | 121 |
| | | கலவானை | 122 |
| | | எம்பிலிப்பிட்டி | 123 |
| 25 | கேகாலை | கேகாலை | 114 |
| | | ரம்புக்கனை | 115 |
| | | மாவனல்ல | 116 |
| | | ருவான்வெல்ல | 117 |

08-308

---

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2026

1.0 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (online) மாத்திரமே முன்வைக்க முடியும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026, செத்தெம்பர் 25 ஆகும். இப்பரீட்சை திசெம்பர் மாதம் இடம்பெறும்.

உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக தாபனத்தலைவர்களிடம் கையளித்தல் வேண்டும் என்பதுடன் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாபனத்தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி வரை தாமதிப்பதினால் ஏற்படும் பாதகமான நிலைமைகளையும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

குறிப்பு : நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளல் 2026, ஓகத்து 31 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதோடு 2026, செத்தெம்பர் 25 ஆம் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடைகிறது.

2.0 அரசாங்க சேவையில் நிரந்தர நியமனங்களைக் கொண்ட அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 யின் பிரகாரம் ஆரம்ப நிலையிலுள்ள PL வகுதிக்கான சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் MN 1-2025 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மட்டும் இப்பரீட்சைக்குத் தகைமை பெறுகின்றனர். இப்பரீட்சையை நடாத்த எதிர்ப்பார்க்கின்ற நகரங்களும், நகரங்களுக்கான இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. போதியளவு பரீட்சார்த்திகள் முன்வராமை அல்லது வேறு ஏதேனும் காரணங்களினால் ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாம் தெரிவிற்கு ஏற்ப பரீட்சை நிலையத்தை தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

| *நகரம்* | *நகர இலக்கம்* | *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | கிளிநொச்சி | 14 |
| கம்பஹா | 02 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 03 | அம்பாறை | 16 |
| கண்டி | 04 | திருகோணமலை | 17 |
| மாத்தளை | 05 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 06 | புத்தளம் | 19 |
| காலி | 07 | அநுராதபுரம் | 20 |
| மாத்தறை | 08 | பொலனறுவை | 21 |
| அம்பாந்தோட்டை | 09 | பதுளை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | மொணராகலை | 23 |
| மன்னார் | 11 | இரத்தினபுரி | 24 |
| வவுனியா | 12 | கேகாலை | 25 |
| முல்லைத்தீவு | 13 | | |

3.0 (i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானியில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்களை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

4.0 **சம்பளம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III க்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 48,470 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - 82,800.00 (MN 2-2025) ஆகும் நியமனத்துக்காக தகைமைபெற்ற விண்ணப்பதாரிக்கு அச்சம்பளம் உரித்தாவது 2027.01.01ஆந் தினத்திலிருந்தாகும். நியமனம் வலுப்பெறும் திகதி தொடக்கம் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். இவை தவிர அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்துக் காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்தாகும்.

**குறிப்பு** : நியமனம் வழங்கப்படும் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அதிகரிப்புச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில், சம்பள அதிகரிப்பு அனுகூலங்கள் வழங்கப்படும்.

5.0 **சேவை நிபந்தனை:**

(i) வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் வலுப்பெறும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு தொகை வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

**குறிப்பு :** இந்த ஆட்சேர்ப்பு மூலம் அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிலவும் அமைச்சுகள்/ திணைக்களங்கள்/ ஆணைக்குழுக்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதுடன், இப்போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்படும் சேவை நிலையத்திற்கு கடமைக்காக சமூகமளிக்கக் கடமைப்பட்டுள்ளனர். நியமனங்கள் வழங்கப்பட்டதன் பின்னர், ஒதுக்கப்பட்ட சேவை நிலையத்தை திருத்தம் செய்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

(ii) அரசாங்க சேவை நியமனங்கள் நிர்வகிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.11 ஆம் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பிறகு செய்யப்படும்

திருத்தங்களுக்கும், தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செய லொழுங்குவிதிகளும், உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(iii) இப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர் களுக்கு நியமனத் திகதியிலிருந்து ஒரு வருட கால தகுதிகாண் கால அடிப்படையின் கீழ் நியமனம் வழங்கப்படும். இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட் சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iv) இப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களை இடமாற்றம் செய்வதற்கும், இலங்கையில் எந்தவொரு பகுதிக்கும் நியமிப்ப தற்கும் முடியும்.

(v) நியமனத்துக்காக தெரிவுசெய்யப்பட்டால் இந்நிய மனம் வழங்கப்படும் சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயம் சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்ற செய்வது அவசியமாயின், அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(vi) நியமனத்துக்காக தெரிவுசெய்யப்பட்டால் தகைமை பெற்ற மொழிமூலத்துக்கமைய 2020.10.16 ஆம் திகதியிடப்பட்ட 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் பிரகாரம் குறித்த வகையில் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுவது அவசியமாகும்.

6.0 **தகைமைகள்:**

அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும், அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 10/2025 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப மட்டத்தில் PL வகுதிக்குரிய சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளங்கள் பெறுகின்ற உத்தியோகத்தர்களும் MN 01-2025 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களும் மாத்திரம் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

**குறிப்பு** : மாகாண சேவையிலுள்ள உத்தியோகத்தர் களுக்கு இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி யில்லை.

இப்பரீட்சையில் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேற்குறிப் பிட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக,

(i) விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் நிரந்தர நியமனத்தில் ஆகக் குறைந்தது 05 வருடங்கள் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அத்தோடு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு ஆளாகியிருத்தல் கூடாது. இவ்விடயமானது திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் மொழி / இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ தூய கணிதம்/ அடிப்படைக் கணிதம்/ வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறுக்கு (06) குறையாத பாடங்களில் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடைய வர்களாக இருத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் 2026, செத்தெம்பர் 25 ஆந் திகதியில் பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும்.

குறிப்பு :

1. ஏதேனுமொரு பதவியில் நிரந்தரமாக நியமிக் கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள அல்லது ஒரு பதவியில் நிரந்தரமாக நியமிப் பதற்கான நிபந்தனையாக சேவை ஆற்றியுள்ள அல்லது பயிற்சி பெறும் காலப் பகுதி மேலே 6.0 (i) இல் குறிப்பிடப்பட்ட தகைமையை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்காகக் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. ஏதேனும் ஒரு பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/ அமைய சேவைக் காலப் பகுதி மேலே 6.0 (i) இல் குறிப்பிடப்பட்ட தகுதி பெறும்

ஐந்து வருட காலப்பகுதிக்காகக் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

2. நியமனத்திற்காக விண்ணப்பதாரர் தெரிவு செய்யயப்படுவாராயின் அவரை விடுவிப்ப தற்கு திணைக்களத் தலைவர் உடன்படுதல் வேண்டும்.

3. பகுதியளவு தொழில்நுட்பம் சார்ந்த பணி களில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் பணிகளுக்காகப் பயிற்சியளிக்கப்பட்டுள்ள அல்லது அரசாங்கத்தினால் விசேடமாக பயிற்சியளிக்கப்பட்டுள்ள எந்தவொரு தரத்திலுமுள்ள ஊழியர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவார். உதாரணமாக பொறியியல் மற்றும் தொழிற்சாலைப் தரங்களிலுள்ள ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலுள்ள பொதுச் சுகாதார ஊழியர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெறமாட்டார்கள். எவரேனும் ஊழியர் ஒருவர் தான் தகுதியானவரா அல்லது தகுதியற்றவரா என சந்தேகம் ஏற்படுமிடத்து, அது தொடர்பில் விண்ணப்பதாரர், திணைக்களத்தலைவர் ஊடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அது தொடர்பில் விசாரித்தல் வேண்டும்.

அதேபோல் இவ் விடயம் தொடர்பாக எவரேனும் ஊழியர் ஒருவரின் தகைமை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப் பாளர் நாயகத்திடம் விசாரிக்கும் போது சம்பளத் திட்டத்துடன் ஊழியரின் பணிகள் தொடர்பான முழுமையான விபரமொன்று குறித்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அந்தப் பணியை செய்வதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரருக்கு பயிற்சி யளிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் அத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பின் அந்தப் பயிற்சியின் தன்மை மற்றும் காலப் பகுதி என்பவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

4. அரசாங்க சேவையில் தற்காலிக மற்றும் அமய ஊழியர்கள், சபைகள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அவை போன்ற துறைகளிலுள்ள ஊழியர்கள் இப் பரீட்சையில் போட்டியி டுவதற்கு தகுதியானவர்களாக மாட்டார்கள்.

5. தபால் திணைக்களத்தைச் சேர்ந்த இணைந்த சேவையிலுள்ள ஊழியர்களைத் தவிர அத்திணைக்களத்திலுள்ள மேலே 3 இல் குறிப் பிடப்பட்ட விதத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ள எந்தவொரு ஊழியரும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவர்.

6. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப் பட்டுள்ள உரிய தகைமைகளை தாம் பூர்த்தி செய்துள்ளதாகத் திருப்தியடைதல் வேண்டும். இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகை மைகள் இல்லாது பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெற்றாலும் நியமனம் பெறுவ தற்குத் தகுதியற்றவர்களாவர்.

7.0 **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாங்கள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். விண்ணப்பதாரர்கள் இப் பரீட் சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். பரீட் சாத்திக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப் பிடப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை மாற்ற அனுமதி இல்லை. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு வினாப்பத்திரங்களுக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக்கான நிகழ்நிலை (online) விண்ணப்பப் படிவங்கள் ஆங்கிலமொழியில் மாத்திரம் பூரணப் படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை மூலம் அனுப்பப்படும் மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாக பரீட்சைத் திணைக்களத்தினால் எற்றுக்கொள்ளப்பட்டமை/ ஏற்றுக்கொள்ளப்படாமை குறித்து கட்டமைப் புக்குள் பிரவேசிக்க பயன்படுத்தப்பட்ட தொலை பேசி இலக்கத்துக்கு குறுந்தகவல் ஒன்றின் மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் (e-mail) அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படி வத்தைப் பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல்களை (common instructions) தர விறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது இவ் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றவும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறித்தவித்தலின்றி நிரா கரிக்கப்படும்.

(iii) பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும்போது நிகழ் நிலைக்கட்டமைப்பில் வழங்கப்படும் பின்வரும் கட் டணச்செலுத்துகை முறைமையொன்றின் மூலமே செலுத்துகை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டை மூலம் (Any Bank Credit Cards)

ii. எந்தவொரு வங்கியினதும் வரவட்டை மூலம் (Any Bank Debit Cards)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமையின் மூலம்/ Flex செயலி மூலம் (Bank of Ceylon Online Banking Method/ Flex App)

iv. எந்தவொரு இலங்கை வங்கியின் கிளைகளினூடாகவும் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு : மேற்படி முறைமையின் மூலம் கட்டணம் செலுத்தப்படுகின்ற முறை தொடர்பிலான அறிவுரைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(iv) கட்டணம் கிடைத்தமைக்கான குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம். அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கட்டண முறைகள் மூலம் பரீட்சை கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

(v) பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பியளிக்கப்படவோ / வேறு எந்தப் பரீட்சைக்கும் மாற்றப்படவோமாட்டாது

(vi) பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்ப தாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சான்றளிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை தொடங்கும் நாளில், ஒருவர் தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை மட்டுமே பரீட்சை மண்டப அதிகாரியிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தகைமை பூர்த்தி செய்தமைக்கான அங்கீகாரமாகக் கருதக்கூடாது.

(vii) இப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் சிறப்பு தேவையுடைய விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக்கு தோற்றினால், அதனை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும் மற்றும் தங்களுடைய விசேட தேவைகள் தொடர்பாக கட்டாயமாக வைத்திய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்ட பிரதி உடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

(viii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி, விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படுவதுடன், தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தி யொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப் படும்படி அது தொடர்பில் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையினூடாக விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப் படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்தப் பட்ட பற்றுச்சீட்டின் பிரதியினை தயாராக வைத்திருப்பதும் பிரயோசனமானதாகும். அனுமதி அட்டையைப் பரிசோதித்து மாற்றங்கள் ஏதும் இருப்பின் இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தை அழைத்து, விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் குறித்த திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனம் செலுத்தப்படமாட்டாது.

8.0 நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள்/மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுப் பட்டியலை, பரீட்சைக்குத் தோற்றிய

அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

9.0 **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்**:- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுரும்வகையின் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப் படுத்தக் கூடியவாறு முகத்தினை மறைக்காது மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இருகாதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். அதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான விதத்தில் திணைக்கள தலைவர் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். பிரயாணக் கட்டணங்கள செலுத்தப்படமாட்டாது.

11.0 **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்** : விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக தகவல்களை நிரப்புதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு இணங்க எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவரின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பதாரர் உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானவை என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

12.0 **பரீட்சை நடைமுறை மற்றும் நியமனத்துக்காக தெரிவுசெய்யப்படும் முறை:**

பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| *பாடங்கள்* | *அதிகபட்சப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* | *நேரம்* |
|---|---|---|---|
| மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான தகைமைகாண் பரீட்சை | 100 | 40 | 02 1/2 மணித்தியாலம் |
| உளச்சார்பு: | 100 | 40 | 01 மணித்தியாலம் |

எழுத்து மூலமான ஒவ்வொரு விடைப்பத்திரம் தொடர்பிலும் தெளிவற்ற கையெழுத்துக்கும் சொற்களின் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். பரீட்சார்த்திகள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில் ஒரு மொழிமூலத்தில் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையில் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதமேனும் (50%) பெறுவது அவசியமாகும். திறமை ஒழுங்கு மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

இந்தப்போட்டிப் பரீட்சைக்குரிய வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதியில் உள்ள சேவையின் வெற்றிடங்களின் எண்ணிக்கையில், சேவைப் பிரமாணக்குறிப்பின்படி 30% வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் அடிப்படையிலான திறமை வரிசையைக் கண்டிப்பாகப் பின்பற்றி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மேற்கூறிய வரம்பிடப்பட்ட போட்டிப் பரீட்சையில் குறைந்தபட்ச சித்திப் புள்ளிகளைப் பெற்றமையினால் மட்டும் எந்தவொரு விண்ணப்பதாரரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கோ அல்லது நியமனத்தைப் பெறுவதற்கோ தகுதியடைய மாட்டார் என வலியுறுத்தப்படுகின்றது.

13.0 **பாடத் திட்டம்:**

**மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தி யோகத்தர் சேவைக்கான தகைமைகாண் பரீட்சை: (காலம் 2 1/2 மணித்தியாலங்கள்)**

பரீட்சார்த்திகளின் கருத்துக்களை வெளியிடுதல், கிரகித்தல், எழுத்துக்களின் பிரயோகம், மொழியும் மற்றும் கட்டுரையும், கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்கான பரும்படியத் தயாரித்தல், கொடுக்கப் பட்ட தரவுகளுக்கு ஏற்ப வரைபுகளையும் அட்ட வணைகளையும் தயாரித்தல், கொடுக்கப்பட்ட பந்தியை சுருக்கி எழுதுதல், கொடுக்கப்பட்டுள்ள பல வாக்கியங்களின் கருத்தை தனி வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கணப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்கான விடயம் சார்ந்த வினாக்களையும்

அலுவலகமொன்றின் அடிப்படை ஆவணங்கள் தொடர்பில் செயற்படும் முறை பற்றி தொடர்பான அடிப்படைச் சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் செயற்பட வேண்டிய முறை பற்றிய அடிப்படை சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர் செயற்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய ஒரு கடிதம் தொடர்பில் செயற்பட வேண்டிய முறை போன்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அலுவலரின் பணிக் கடமைகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவை பரீட்சிப்பதற்கான வினாக்களையும்

அலுவலகமொன்றில் பயன்படுத்தப்படும் தினக்குறிப்பு, வவுச்சர்கள், அசைவுப் படிவங்கள், வரவுப்பதிவேடு, தின முத்திரை, முத்திரை, பதவி முத்திரை, தபால் பொதி போன்ற உபகரணங்கள் தொடர்பிலும் அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்கள் தொடர்பிலும் பரீட்சார்த்திகளின் அறிவை பரீட்சிப்பதற்கான வினாக்களையும் இவ்வினாப்பத்திரம் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பகுதி I - மொழியாற்றலை அளவிடும் விதத்தில் கிரகித்தலுடன் தொடர்புடைய கட்டமைப்பு வினாக்கள், சுருக்கம் எழுதுதல் மற்றும் கட்டுரை (1 மணித்தியாலமும் 15 நிமிடங்கள், 50 புள்ளிகள்)

பகுதி II - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கான பொருத்தப்பாட்டை அளவிடும் சம்பவமொன்றின், கூற்றொன்றின் அல்லது பந்தி யொன்றின் அடிப்படையில் கேட்கப்படும் சுருக்க வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் மற்றும் கட்டுரை வகை வினாக்கள் (1 மணித்தியாலமும் 15 நிமிடங்கள், 50 புள்ளிகள்)

**உளச்சார்பு (காலம் 01 மணித்தியாலம்)**

இவ் வினாப்பத்திரம் விண்ணப்பதாரர்களின் கணக்குத் திறன், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொதுவான நுண்ணறிவு போன்றவற்றை அளவிடும் விதத்தில் விடயம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும்.

பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் 50 வினாக்கள்

(காலம் 01 மணித்தியாலம்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.0 இப் பரீட்சை அறிவித்தலுக்கு இணங்க ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

15.0 இதன் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களில் ஏதேனும் ஒத்திசைவின்மைகள் காணப்படுமாயின், அச்சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும்.

என்.யு.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, ஓகத்து 19.

08-309

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத பாதுகாப்பு (ஆண்/பெண்) - III தரத்திற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த எழுத்து மூலப் பரீட்சை - 2026

இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத பாதுகாப்பு (ஆண்) பதவியில் 239 வெற்றிடங்கள் மற்றும் பாதுகாப்பு (பெண்) பதவியில் 17 வெற்றிடங்கள் தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இதன் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவது இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத பாதுகாப்பு (ஆண்/பெண்) பதவிக்காகும்.

2, விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.09.28 ஆகும்.

குறிப்பு :

1. விண்ணப்பம் அல்லது அது தொடர்பிலான கடிதமொன்று தபாலில் தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதிப்பதினால் ஏற்படும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் விண்ணப்பதாரியினாலேயே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2. விண்ணப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பதாரிகளும் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதினால் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு அல்லது எழுத்து மூலப் பரீட்சைக்கு தோற்றுதல் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

**1.1 பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்யும் ஆரம்ப பரீட்சை மற்றும் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இப்பரீட்சை தொடர்பில் ஈடுபடுத்தப்படுவதோடு அதற்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுள் 50% அல்லது அதற்கு உயர் மட்டத்தில் மொத்த புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைக்கு முன்வைக்கப்படுவர்.

| *செயற்பாடு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| தூர ஓட் ட மீற்றர்கள்/Run meters 1000 | 03 நிமிடங்களுக்கு குறைவு எனின் | 30 |
| | 03 நிமிடங்களுக்கும் 04 நிமிடங்களுக்கும் இடையில் | 20 |
| | 04 நிமிடங்களுக்கும் 05 நிமிடங்களுக்கும் இடையில் | 10 |
| | 05 நிமிடங்களுக்கு அதிகம் எனில் | சித்தியடையவில்லை |
| Chinup ( 05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 15 ஆகும் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் அதிகூடிய புள்ளிகள் 15 ஆகும் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் அதிகூடிய புள்ளிகள் 15 ஆகும் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 01 புள்ளி வீதம் அதிகூடிய புள்ளிகள் 15 ஆகும் |
| Kim Gem (நினைவாற்றலை பரீட்சித்தல்) | விடயங்களை அவதானிப்பதற்காக 30 செக்கன்களும் கிரகிப்பதற்காக 30 செக்கன்களும் எழுதுவதற்காக 120 செக்கன்களும் வழங்கப்படும் | ஒரு உருப்படிக்கு 01 புள்ளி வீதம் அதிகூடிய புள்ளிகள் 10 ஆகும் |

புகையிரத பொதுமுகாமையாளரினால் நியமிக்கப் படுகின்ற குழாத்தினால் நடாத்தப்படுகின்ற ஆரம்ப கட்ட பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அச் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி ஆரம்ப கட்ட பரீட்சைக்கு முகம் கொடுப்பதற்கு தகைமையற்றவர் அல்ல என்பது தொடர்பில் கோரல் கடிதத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்ட மாதிரி படிவத்தை இலங்கை மருத்துவ சபையில் பதிவினைக் கொண்ட மருத்துவரொருவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

1.2 **எழுத்துமூல பரீட்சை -**

அப் பொருத்தப்பாட்டு மதிப்பீட்டு ஆரம்ப பரீட்சை யின் பின்னர் இப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். தமது விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி வழங் கப்படமாட்டாது.

(1) நுண்ணறிவுப் பரீட்சை

(2) மொழித்திறன்

1.3 **பொருத்தப்பாட்டு மதிப்பீட்டு ஆரம்ப பரீட்சை மற்றும் எழுத்து மூலப் பரீட்சை நிகழும் திகதி :**

பொருத்தப்பாட்டு மதிப்பீட்டு ஆரம்ப பரீட்சை மற்றும் இப் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடைபெறும். இப் பரீட்சையை பிற் போடுவதற்கு அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளரிற்கு காணப்படுகிறது.

02. வெற்றிடங்களின் எண்ணிக்கை 256 ஆகும். (புகையிரத பாதுகாப்பு - ஆண் 239 மற்றும் பெண் 17 என). இறுதி வெற்றிடம் தொடர்பில் அல்லது இறுதி வெற்றிடங்கள் சிலவற்றிற்காக சம புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் வெற்றிட எண்ணிக்கையை விஞ்சி காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ் வெற்றிட எண் ணிக்கையை நிரப்புவது தொடர்பிலான தீர்மானமானது நடைமுறை விதிக்கோவையின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

03. **சேவை நிபந்தனைகள் :**

3.1 அரசாங்க சேவையில் நியமனங்கள் கட்டுப்படுத்தப் படுகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் புகையிர பாதுகாப்பு சேவையின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்னைகளுக்கும் அத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர் காலத்தில் இதனகத்தும் செய்யப்படும் திருத்தங் களுக்கும் தாபனக்கோவையில் அல்லது நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கீழ் தெரிவு செய்யப் பட்ட விண்ணப்பதாரிகள் பாதுகாப்பு பதவிக்கு நியமிக்கப்படுவர்.

3.2 இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் இன்னகத்தும் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கீழ்படிய வேண்டும்.

3.3 இப் பதவியானது மூன்று வருட தகுதிகூர் நிலை காலத்திற்கு கீழ்படிவானது. இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாப்பு சேவை யில் புகையிரத பாதுகாப்பு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்களுள் ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இற்கமைய மற்றும் அதற்கு இடைநேர் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய பதவியில் இணைந்து 05 வருட காலத்தினுள் ஏற்புடைய அரசகரும மொழியில் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

3,5 தங்களுக்கு வழங்கப்பட்ட பதவியில் கடமைகளை ஏற்புடைய காலத்தில் பொறுப்பேற்பதற்கு தாங்கள் தவறும் பட்சத்தில் மற்றும் /அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது கைவிடும் விண்ணப்பதாரிகளின் நியமனங் களை இரத்து செய்வதற்கான அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளருக்கு உள்ளது

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 உடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய இப் பதவிற்குரிய சம்பள அளவுதிட்டம் (RS 1-2025) ரூ. 49, 550 - 7 X 540 - 27 X 670 - ரூபா 71,420.00 ஆகும், அதாவது ரூபா 49,550.00 எனும் ஆரம்ப சம்பள படிமுறையில் வைக்கப்படுவீர். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப்போது செலுத்தப்படுகின்ற வேறுபடிகளுக்கும் நீங்கள் உரித்துடையவர் ஆவீர்கள்.

05. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் :**

(அ) **உடல்சார் தகைமைகள் -**

(i) அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை யில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவ தற்கும் பதவியில் கடமை புரிவதற்கும் தேவை யான உடல் மற்றும் உள ரீதியான பொருத் தப்பாட்டினை கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) உயரம் (காலணிகள் இன்றி)

- ஆண் விண்ணப்பதாரிகள் தொடர்பில் 05 அடி 06 அங்குலம் காணப்படுதல் வேண்டும். (5' 6")

- பெண் விண்ணப்பதாரிகள் தொடர்பில் 05 அடி 02 அங்குலம் காணப்படுதல் வேண்டும். (5' 2")

(iii) கண் பார்வை :- மூக்குக் கண்ணாடியின்றி "ஏ" 2 பார்வைக்கோணம் காணப்பட வேண்டும். (இது எல்பீ. 29 கண் பார்வை பரீட்சையில் சித்தியடைவதன் அடிப்படையில்)

(iv) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மார்பு 32 அங்குலம் இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்விசார் தகைமைகள் :**

கல்வி பொதுதராதர சான்றிதழ் சாதாரண தர பரீட்சையில் இரு தடவைகளை விஞ்சாதபடி சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் இரு (02) திறமை சித்திகளை கொண்டு சித்தியடைந்திருத்தல்.

(இ) **வயது:**

2026.09.28 ஆம் திகதிக்கு குறைந்தபட்ச வயதெல்லை 18 இற்கு குறையாதிருக்க வேண்டும் என்பதோடு அதிக்கூடிய வயதெல்லை 28 இனை விஞ்சாது இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2008.09.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1997.09.29 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்த நாளை உடையவர்கள் மாத்திரம் இத் தொடர்பில் விண்ணப்பிப்பதற்கு தகைமையுடையவர்கள் ஆவர்)

(ஈ) **வேறு :**

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்

(ii) அனைத்து விண்ணப்பதாரிகளும் விவாகமற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

(iv) எந்தவொரு மத துறவறத்தை பூண்டவர்களுக்கும் இப்போட்டி பரீட்சைக்கு விண்ணப்பிக்க அல்லது தோற்றுவதற்கு அனுமதி இல்லை.

(v) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் தேவையான மேலே காட்டப்பட்டுள்ள அனைத்து தகைமைகளும் விண்ணப்பக் கோரல் அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

06. பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 ஆகும். இக் கட்டணமானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல. 176-100129027-313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணபத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்) பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பமானது இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக காணப்பட வேண்டும் என்பதோடு , அதனை பயன்படுத்தி ஏ4(A4) அளவிலான தாளில் விண்ணபத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாவது பக்கத்திலும் 7.0 தொடக்கம் 12(i) வரை அதன் இரண்டாவது பக்கத்திலும் 12(ii) தொடக்கம் 14(இ) வரை மூன்றாவது பக்கத்திலும் எஞ்சியவை ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு தமது விண்ணபங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனத்திற் கொள்ள வேண்டும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணபங்கள் பாவிக்கப்படலாம். மாதிரிக்கு ஒவ்வாத விண்ணபங்கள், பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதால் விண்ணபத்தினை முன்வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா மற்றும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரீசிலித்து பார்க்க வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணபத்தின் நகல் மற்றும் ஏற்புடைய பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(அ) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும். விண்ணபத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு

மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும்.

(ஆ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.09.28 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் “இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத பாதுகாப்பு (ஆண்/பெண்) - பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப் போட்டிப் பரீட்சை – 2026 “ என குறிப்பிடப்பட வேண்டும். அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
நியமனக் கிளை,
த.பெ. 355,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(இ) விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை தொடர்பிலான நுழைவுச்சீட்டில் விண்ணப்பதாரியின் கையொப்ப மானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிப ரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத் தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய உத்தியோகத்தரொருவர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவியினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்பமொன்று தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் எந்தவித முறைப் பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே இது குறித்து அறிவித்தலொன்று பத்திரிகைகளில் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறவில்லையெனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத் திற்கு தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு தெரிவிக்கையில் விண்ணப்பித்த பரீட்சை, விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரியாயின் மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியினை அனுப்பி வைப்பதன் பொருட்டு உமது தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தின் ஊடாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும் .மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கோரப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு விண்ணப்பதாரியினால் தங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பத்தின் பிரதி, செலுத்திய பரீட்சை கட்டணத்திற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தினை தபாலிடுகையில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றினை கைவசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்.

08. **பரீட்சைக்கு தோற்றல் :**

(அ) விண்ணப்பக்கோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் விண் ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சை கட்டணத்தினை செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும். தமது நுழைவுச்சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கு தோற்று வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதி செய்து கொண்டு பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளிலேயே அதன் மண்டலாதிபதியிடம் பொறுப் பளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரி களும் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வறிவித்தலின்

ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அவ்விதிகளை மீறினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டணைக்கு உட்பட நேரிடும்.

குறிப்பு : விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றவோ அல்லது பதவியொன்று தொடர்பில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாகவோ ஏற்றுக்கொள்ளவதாக கருதப்பட மாட்டாது.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(a) தேசிய ஆளடையாள அட்டை;
(b) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு ;
(c) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

10. **பொய்யான தகவல்களை வழங்குவது தொடர்பிலான தண்டனைகள் :**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு பின்னர் அல்லது பரீட்சை நிகழ்கையில் அல்லது பரீட்சைக்கு பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

11. இந் நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் அறிவுரைகளுக்கு ஏற்ப செயலாளரின் தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம் :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மொழிமூலங்களில் நடைபெறும்.
(ஆ) விண்ணப்பதாரி கல்வி தகைமைகளை பெற்றுக்கொண்ட மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

குறிப்பு: (i) மேற்கூறிய (ஆ) வில் உள்ள தகைமைகள் எனும் பதத்தால் கருதப்படுவது 5 (ஆ) பந்தியில் உள்ள கல்வித் தகைமைகளாகும்.
(ii) விண்ணப்பதாரியொருவர் பரீட் சைக்கு தோற்றுகின்ற அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்கப்பட வேண்டும்.
(iii) தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது.

13. **ஆட்சேர்ப்பு முறைமை** :

13.1 **எழுத்துப் பரீட்சை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்டமைந்த இரு (02) வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை நடைபெறும் பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடங்களிலும் சித்தியடைய பெற்றுக் கொள்ளவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| *பாடம்* | *புள்ளிகளின் எண்ணிக்கை* | *சித்தியடைவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்த பட்ச புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 01. நுண்ணறிவு பரீட்சை | 100 | 50 |
| 02. மொழித்திறன் | 100 | 50 |

விண்ணப்பதாரிகள் அனைத்து வினாத் தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.

13.2 **எழுத்து பரீட்சையின் பாட விதப்புரை**

01. **நுண்ணறிவு பரீட்சை :**

தர்க்கரீதியான விமர்சன அறிவு, உடனடியாக முடிவெடுக்கும் திறமை, எண் சிக்கல்கள், கணித சிக்கல்கள், மொழித் தொகுதிகள், அட்டவணைகள், செயல்முறை குறிப்புகள், படங்கள் மற்றும் வரைபுகள் என்பவற்றை கொண்டமைந்த பல்வினா மாதிரியான வினாத்தாளாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். (காலம் 01 மணித்தியாலம்)

02. **மொழித்திறன்** :

சரியாக மற்றும் தெளிவாக கருத்தினை நிரற்படுத்துவதற்கான திறமை, அறிக்கையினை தயாரிக்கும் திறன், சரியான இலக்கண பயன்பாடு, புரிந்துக்கொள்ளும் திறன் மற்றும் அலுவலக கடித பரிமாற்றல்களை மேற்கொள்ளும் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட சுருக்கமான விடையளித்தல், கட்டுரை மற்றும் கட்டமைக்கப்பட்ட மாதிரியான வினாத்தாளாகும். எல்லா வினாக்களுக்கும் விடை யளிக்க வேண்டும். (காலம் 02 மணித்தியாலங்கள்)

13.3 **கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சை :**

எழுத்து மூல பாடங்கள் இரண்டில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியே 50% புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமாக புள்ளிகளைப் பெற்று தகைமையை பெற்ற விண்ணப்பதாரிகளின் உச்ச திறமையின் முறைக்கமைய தேவையான எண்ணிக்கையானோர் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சைக்கு முன்வைக்கபடுவர். எழுத்து பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் மொத்த புள்ளிகளில் அதிக புள்ளிகளின் முறைக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

புகையிரத பொதுமுகாமையாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முக பரீட்சை குழாத்தினால் கீழ்வரும் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் ஐம்பது (50) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான விடயங்கள்* | *அதிகூடிய புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வி தகைமைகள் | 20 | ஏற்புடையதல்ல |
| 02 | தலைமைத்துவம் மற்றும் வேறு சமூக சேவைகள் | 20 | |
| 03 | விளையாட்டு தகைமைகள் | 30 | |
| 04 | மொழி அறிவு மற்றும் தகவல் தொழிநுட்பம் தொடர்பிலான அறிவு | 25 | |
| 05 | நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டப்படுகின்ற திறமை | 05 | |
| மொத்த புள்ளிகள் | | 100 | |

13.4 அதில் புள்ளிகள் வழங்கப்படும் முறைமை கீழே விளக்கமாக காட்டப்பட்டுள்ளது.

(i) மேலதிக கல்வி தகைமைகள் (20 புள்ளிகள்)

குறித்த கல்வி தகைமைகளுக்கு மேலதிகமான கல்வி தகைமைகள் தொடர்பிலான அதிகூடிய புள்ளிகள் 20 ஆகும்.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றில் கௌரவ பட்டப்படிப்பினை பெற்றிருத்தல் - 20 புள்ளிகள்
2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றில் பொது பட்டப்படிப்பினை பெற்றிருத்தல் - 15 புள்ளிகள்
3. எந்தவொரு பாட துறை தொடர்பிலும் NVQ 04 அல்லது அதற்கு மேலான சான்றிதழினை பெற்றிருத்தல் - 10 புள்ளிகள்
4. கபொ.த. (உ./தர) இல் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் - 05 புள்ளிகள்

(ii) தலைமைத்துவம் மற்றும் வேறு சமூக சேவைகள் (20 புள்ளிகள்)

(iii) விளையாட்டு தகைமைகள்

கிரிக்கட், றக்கர், குத்துச்சண்டை, கராட்டி, ஜிம்னாஸ்டிக், தடக்களவிளையாட்டுக்கள் போன்ற விளையாட்டுக்களில் பெற்றுள்ள திறமை மற்றும் மாணவர் படைப் பயிற்சி தொடர்பிலான சான்றிதழ்களை பெற்றிருத்தல் எனும் இரு விடயங்களில் ஒரு விடயத்திற்கு மட்டும் உச்ச புள்ளிகளாக 15 புள்ளிகள் வழங்கப்படும்.

தேசிய மட்டத்தில் முதலிடம் - 30 புள்ளிகள்

மாவட்ட மட்டத்தில் முதலிடம் - 30 புள்ளிகள்

பிரதேச மட்டத்தில் முதலிடம் - 10 புள்ளிகள்

வேறு சான்றிதழ்கள் - 05 புள்ளிகள்

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்கள் தொடர்பில் வீதாசார அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

(iv) மொழி அறிவு மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு (25 புள்ளிகள்)

இப்போட்டி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளை பெற்றுள்ள மேலே தொடரிலக்கம் 05 இல் (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்திற்கு மேலதிகமாக அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய மொழி மூலங்களுக்காக விண்ணப்பதாரியினால் நேர்முக பரீட்சையில் முன்வைக்கப்படுகின்ற சான்றிதழ் தொடர்பாக ஒரு மொழிக்கு 05 புள்ளிகள் எனும் வகையில் இரண்டு மொழிகள் தொடர்பில் 10 புள்ளிகள் உச்ச புள்ளிகளாக வழங்கப்படும்.

(iv) நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டிய திறமை (05 புள்ளிகள்)

**கவனத்திற் கொள்ளவும் :** நேர்முக பரீட்சைக்கு தோற்றல், நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமையினை பூர்த்தி செய்திருப்பதாக கருதப்பட மாட்டாது..

13. பரீட்சைக்கு தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு அல்லது இலங்கை நிர்வாக நிறுவகத்தினது இணையத்தளத்தில் வெளியிட இலங்கை நிர்வாக நிறுவகமானது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

14. இவ் அறிவித்தலானது சிங்கள மற்றும் தமிழ், மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனு மொரு பொருத்தப்பாடற்ற தன்மை மற்றும் இணக்கப்பாடின்மை காணப்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

ரவிந்திர பத்மபிரிய,
புகையிரத பொதுமுகாமையாளர்.

புகையிரத பொதுமுகாமையாளர்,
இலங்கைப் புகையிரத திணைக்களம்,
த.பெ. 355,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(இதற்கமைய A4 தாளின் இருபுறத்தினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பூரணப்படுத்துவதற்கு முன்னர் விண்ணப்பக் கோரல் அறிவித்தலினை வாசித்து நன்றாக விளங்கிக் கொள்ளல் வேண்டும்)

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

**இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத பாதுகாப்பு (ஆண்/பெண்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பிலான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

Open Competitive Examination for Recruitment to Railway Security(Male/female) of Railway Security Service in Sri Lanka Railway Department - 2026

01. மொழிமூலம்
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4
(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக) விண்ணப்பமானது பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழியிலேயே நிரப்பப்பட வேண்டும்.

02. முழுப் பெயர் :

சிங்களத்தில்/தமிழில் : ……………………………………………………………………………………

ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :…………………………………………………….

(உதாரணம் HERATH MUDIYANSELAGE PIYAL SILVA)

03. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(1) சிங்களத்தில்/தமிழில் : ………………………………………………………………………………………………

(2) ஆங்கிலத்தில் : ………………………………………………………………………………………………

04. நிரந்தர முகவரி :

(1) சிங்களத்தில்/தமிழில் : ………………………………………………………………………………………………

(2) ஆங்கிலத்தில் : ………………………………………………………………………………………………

05. தொலைபேசி இலக்கம்

(i) கையடக்க தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(ii) அலுவலக தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

06. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

07. பெண்/ஆண் பால்

பெண் : 1

ஆண் : 0

(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

08. விவாகமானவர்/விவாகமற்ற நிலை

விவாகமானவர் : 1

விவாகமற்றவர் : 0

(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

09. வதிவிடம்

(1) கிராம அலுவலர் பிரிவு........................................... அதன் இலக்கம்

(2) பிரதேச செயலாளர் பிரிவு ................................................

(3) மாவட்டம் ................................................

10. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

2026 ஆம் ஆண்டு .......... திகதிக்கு வயது : வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள்: | | |

11. தற்போது சேவை புரியும் நிறுவனம்/திணைக்களம் :.......................................................................

12. கல்விசார் தகைமைகள் :

(1) கபொ.த.(சா./த.)

பரீட்சை சுட்டெண் :........................... ஆண்டு :.............................

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| i | | |
| ii | | |
| iii | | |
| iv | | |
| v | | |

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| vi | | |
| vii | | |
| viii | | |
| ix | | |
| x | | |

(ii) கபொ.த.(சா/த) இரண்டாம் தடவை

பரீட்சை சுட்டெண் :........................... ஆண்டு :.............................

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| i | | |
| ii | | |
| iii | | |
| iv | | |
| v | | |

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| vi | | |
| vii | | |
| viii | | |
| ix | | |
| x | | |

13. நீங்கள் எச்சந்தர்ப்பத்திலேனும் அல்லது ஏதேனும் ஓர் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப் பட்டுள்ளீரா?

(குறித்த கூட்டினுள் X அடையாளத்தை இடுக)

ஆம் ☐ இல்லை ☐

14. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை அறியத்தருகின்றேன். இதில் ஏதேனும் பகுதியினை பூர்த்தி செய்யாதிருத்தல், தவறாக மற்றும் பொய்யாக பூர்த்தி செய்திருத்தல் போன்ற காரணங்கள் என்னுடைய விண்ணப்பம் நிராகரிப்பு செய்யப்படுவதற்கான காரணங்களாக அமையும் என்பதையும் பதவியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் மேற்கூறிய விடயங்கள் தெரியவருமிடத்து பதவி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நியமனம் இரத்து செய்யப்படுவதையும் நன்கு அறிவேன்.அதனால் ஏற்படும் நட்டத்தினை நான் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்கிறேன்.

(ஆ) மேற்கூறிய (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை என நான். பதவியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இணங்குவதையும் இத்தால் அறியத் தருகின்றேன். அதனால் ஏற்படும் நட்டங்கள் ஏதும் இருப்பின் அவற்றை நான் தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(இ) ...................................................... ஆம் திகதி .............................................. வங்கியின் ...................................... கிளைக்கு ரூ.1,200.00 ஐ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் அசல் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாத வண்ணம் அதன் ஓர் ஓரத்தில் ஒட்டவும் பற்றுச்சீட்டின் (பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்ளவும்) |

(ஈ) இப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட இணங்குகின்றேன்.

(உ) மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்படிவதை இத்தால் அறியத் தருகின்றேன்.

திகதி : ………………………………………. ................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள திரு./செல்வி ........................................................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன். அவர் ..........................................ஆம் திகதி என் முன்னால் கையொப்பமிட்டார் என்பதையும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமையையும் அப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ………………………………………. ...................................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ……………………………………………………………………………………
பதவி : ………………………………………………………………………………….
முகவரி : ………………………………………………………………………………
(தயவு செய்து உத்தியோகபூர்வ இலட்சினையை பொறிக்கவும்)

16. திணைக்கள /நிறுவன பிரதானியின் உறுதிப்படுத்தல்

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள திரு./திருமதி/செல்வி ..................................................... அவர்கள், .................... ....................................... திணைக்களத்தில்/நிறுவனத்தில்....................................ஆம் திகதி முதல் ................................ ...வரை ......................................... ஆக சேவை செய்துள்ளார். அவருக்கு எதிராக முடிவுறாத ஒழுக்காற்று நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டுள்ளது/அறிக்கையிடப்படவில்லை. அவரது வேலை, நடத்தை மற்றும் வரவு மகிச்சிகரமானது/ மகிழ்ச்சிகரமற்றது. குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தியிருப்பதையும் அப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டிருப்பதையும், அவர் புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத பாதுகாப்பு (ஆண்/பெண்) III ஆம் தர பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இத் திணைக்களத்திலிருந்து /நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதை அறியத் தருகின்றேன்.(ஏற்புடையதற்ற சொல்லினை வெட்டி விடவும்)

……………………………………………………….
திணைக்கள / நிறுவன பிரதானியின் கையொப்பம்

திகதி : ……………………………………….

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் ........................................................................................
பதவி ..........................................................................................................................................................
முகவரி ......................................................................................................................................................
(தயவு செய்து உத்தியோகபூர்வ இலட்சினையை பொறிக்கவும்)

08-310

---

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) ஆகிய பதவிகளின் தரம் III இற்குப் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் நிலவுகின்ற தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) (வெற்றிட எண்ணிக்கை 01), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) (வெற்றிட எண்ணிக்கை 01) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) (வெற்றிட எண்ணிக்கை 01) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் “தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிக்கூடத் திணைக்களம், இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07” என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவை வகுதியின் தரம் III இற்கு தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026" எனத் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026 செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதியாகும்.

குறிப்பு : விண்ணப்பப்படிவம் அல்லது அது சார்ந்த கடிதங்கள் தபாலில் தொலைந்துவிட்டன என்றோ அல்லது தாமதமாகிவிட்டன என்றோ கூறப்படும் முறையீடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

2. **பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள்:**

I. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) :**

பதிவுகளின் காப்பு மற்றும் மீட்டெடுப்பு பற்றிய தேவையான ஆலோசனைகளை வழங்குதல், பதிவுகளின் மீளுருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், பதிவு பேணுகைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளல், பதிவுகளின் பேணுகை மற்றும் மீளுருவாக்கம் பற்றிய தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல தரப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் அறிவியல் அவதானிப்புகளை வழங்குதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளின் மோசமடைதல் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆதரவளித்தல், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பதிவுகளின் பேணுகை மற்றும் மீளுருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், பதிவுகளின் பேணுகை, காப்பு மற்றும் மீட்டெடுப்பு பற்றிய இரசாயன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வழிகாட்டலின் கீழ் உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல - கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

II. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்):**

மின்னணு பதிவுகளை ஈர்த்தெடுப்பதற்கான மென்பொருட்களை இனங்காணல் மற்றும் ஈர்த்தெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வழங்குதல், மின்னணு காப்பக ஆவணமொன்றைப் பேணிச்செல்லல் மற்றும் அதற்கான தரநிலைகளை நடைமுறைப்படுத்தல், ஈர்த்தெடுக்கப்படும் எண்மிய ஆவணங்களை நீண்டகாலமாகப் பேணுவதற்காக அவ்வப்போது பொருத்தமான ஊடகங்களுக்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பதிவுகளை எண்ணிமமயமாக்குவதற்குத் தேவையான தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், செவிப்புல- கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

III. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) :**

திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளை உள்வாங்கிக் கொள்ளல் மற்றும் அவ்வைப்பை முகாமைத்துவம் செய்தல், அப்பதிவுகளை இனங்காணல் மற்றும் விவரித்தல் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது குறித்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல காப்பகஆவணத்தைப் பேணிச்செல்லல் மற்றும் அப்பதிவுகளின் பேணுகை மற்றும் மீட்டெடுக்கத் தேவைகளைக் கண்டறிந்து அதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல பதிவுகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை இனங்காணல், திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல காப்பகஆவணங்களை எண்ணிமமயமாக்குவதற்குத் தேவையான கணினி வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களை அவ்வப்போதைய தரநிலைகளுக்கு ஏற்ப இனங்காணல், கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான பணி இலக்குகளை வழங்குவதுடன் அவர்களின் கடமைகளைக் கண்காணித்தல், தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் (தொழில்நுட்ப, செவிப்புல - கட்புல மற்றும் மின்னணு பதிவுகள்) மற்றும் தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய பணிகள்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிக்க வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1 ஆம் திறமைகாண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய மற்றும் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதற்கு நிகரொத்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய,

ஏனைய அரசகரும மொழி/மொழிகளில் குறிப்பிட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதிபெறும் மொழிமூலமானது, உங்களால் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் மொழிமூலமாகும்.

(v) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியினருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய திணைக்களக் கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்பட்டதாகும்.

4. **சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்கு 2025.03.25 ஆம் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க, SL1-2025 ரூபா. 82,150 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூபா 195,970.00 (மாதாந்தம்) என்ற சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, அதன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

5. **கல்வித் தகைமைகள் :**

i. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்ட மொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்,

காப்பகஆவணக் காப்பு அல்லது இரசாயன வியல் பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

காப்பக ஆவணக் காப்பு அல்லது இரசாயன வியல் பாடத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் முதுகலைப் பட்டத்தைப் பெற் றிருத்தல்.

2. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல்.

ii. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்ட மொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத் தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றில்,

கணினி அறிவியல், கணினி மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

கணினி அறிவியல், கணினி மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்துடன் முதுகலைப் பட்டத்தையும் பெற்றிருத்தல்

2. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல்.

iii. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்ட மொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்

25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில்,

கலைமாணி, கட்புல வடிவக் கலைமாணி, நுண்கலைமாணி பொதுப் பட்டத்துடன் முது கலைப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

கலைமாணி, கட்புல வடிவக் கலைமாணி, நுண்கலைமாணி பொதுப் பட்டத்துடன் பட்டப் பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

2. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கிலம் / பொது ஆங்கிலம் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டப் படிப்பினை ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல்.

**குறிப்பு**

பட்டப்படிப்பானது செல்லுபடியாகும் திகதி, விண்ணபப்ங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னைய ஒரு திகதியாகவோ இருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை** :

விண்ணபப்ங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இருபத்தொன்று (21) வயதுக்கு குறையாமலும் முப்பத்தைந்து (35) வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும்.

7. **உடற் தகைமைகள்**:

எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப் பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

8. **ஏனைய தகைமைகள்:**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக அவசியப் படும் சகல தகைமைகள் மற்றும் நிபந்தனை களையும் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறைமை :**

எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப் படுவார்கள்.

எழுத்துப் போட்டிப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு பாடத்திற்கும் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து, புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைக்கு அமைய நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று 04 மடங்கு விண்ணபப்தாரர்கள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையின் போதே அடிப்படைத் தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைக்கு அமைய பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வெற்றிடங்களையோ அல்லது அனைத்து வெற்றிடங்களையோ நிரப்புவது அல்லது நிரப்பாதிருப்பது என்பன தொடர்பிலும், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

10. **எழுத்துப் பரீட்சை:**

10.1 இப்பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

10.2 **பாடத் திட்டம்**

i. தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்ப)/ தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் ( மின்னணு பதிவுகள்

மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல)

| *இலக்கம்* | *பாடங்கள்* | *பாடத் திட்டம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *வெட்டுப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுத் தேர்வு | விண்ணப்பதாரரின் பொது அறிவு, தர்க்க ரீதியான திறன், கருத்து வெளிப் பாட்டுத் திறன், எண்கள், மொழி மற்றும் வடிவ அமைப்புகள் மற்றும் அவற்றுக்கிடையேயான பரஸ்பரத் தொடர்புகள் குறித்து முன்வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வுத் திறன், வியாக்கியானம் செய்யும் திறன், ஏனைய சூழ்நிலைகளுக்குப் பயன் படுத்தும் திறன் மற்றும் முடிவு களை எட்டுதல் ஆகியவை தொடர்பில் விண்ணப்பதாரரின் புத்திக் கூர்மையின் மட்டத்தை மதிப்பிடுவதே இந்த வினாத் தாளின் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது. | 01 மணித்தியாலம் | 100 | 50 |
| 02 | ஆங்கிலம் | எழுத்தாற்றல்<br>• தொடர்புடைய துறையில் நவீன மாதிரிப் படிவங்கள் மற்றும் எழுத்து நடைகள் பற்றிய அறிவு<br>• உள்ளக தகவல் தொடர்பாடல் முறைகள்<br>• உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றத் திறன்<br>• விவரித்தல்/விளக்குதல் மற்றும் எழுதுதல்<br>• இலக்கணம்<br>• சுருக்கம் எழுதும் ஆற்றல்<br>• அறிக்கை எழுதும் ஆற்றல்<br><br>கிரகித்தல்<br>• அச்சிடப்பட்ட உரையொன்றைப் புரிந்து கொள்வதற்கும், அதன் அர்த் தத்தை ஊகிப்பதற்கும், எழுதப்பட்ட வற்றை விளக்குவதற்கும் விண் ணப்பதாரர்களுக்குள்ளதிறன் எதிர் பார்க்கப்படுகிறது.<br>• அச்சிடப்பட்ட உரையொன்றின் குறிப்பிட்ட மற்றும் பொதுவான அர்த்தத்தை வாசித்துப் புரிந்து கொள்ளல்<br><br>மொழிபெயர்ப்புத் திறன்<br>• தரப்பட்டுள்ள உரையொன்றின் அர்த்தம் மாறாத வகையில் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்த்தல் | 02 மணித்தியாலம் | 100 | 50 |

11. **தகுதி மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை :**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபை ஒன்றின் மூலம் பின்வரும் புள்ளி வழங்கும் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

i. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) :**

| *தொடரிலக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இரசாயனவியல், திட்ட முகாமைத் துவம் ஆகிய துறைகளிலான முதுமாணிப் பட்டம் :<br>1. ஆராய்ச்சி அடிப்படையிலானது<br>2. பாடநெறி அடிப்படையிலானது<br>(அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாகப் பெறப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) | <br>15<br>10 | 15 |
| 02 | **துறை சார்ந்த தொழிற்துறைத் தகைமைகள்**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கலாசார மற்றும் வரலாற்று விழுமியங்களைக் கொண்ட பொருட்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு அறிவியல், காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br>1. முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. முதுமாணிப் பட்ட டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>3. பட்டப்படிப்பு ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது காப்பகஆவண முகாமைத்துவத்துடன் தொடர்புடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்ட கலாசார மற்றும் வரலாற்று விழுமியங்களைக் கொண்ட பொருட்களை செப்பனிடுதல், பாதுகாப்பு அறிவியல், காப்பகஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br>1. டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்காக (குறைந்த பட்சம் 36 மணித்தியாலங்கள்) | 15<br>10<br>08<br><br>04<br>02 | 15 |

| *தொட ரிலக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | **துறை சார்ந்த தொழிற்துறை அனுபவங்கள்**<br>கலாசார மற்றும் வரலாற்று மதிப்பைக் கொண்ட பொருட்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பு அறிவியில், காப்பக ஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் அல்லது முதன்மைப் பொறுப்பை வகித்த பதவியொன்றில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் (தொடர்புடைய நிறுவனத் தலை வரினால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்). இச்சான்றிதழில் சேவை ஆரம்பிக்கப்பட்ட/ நிறைவடைந்த திகதிகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றாராயின் அது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். | 15 | 15 |
| 04 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள்**<br>i. பதவியில் பங்களிப்பை ஆற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரரின் பலங்கள் (Strengths questions)<br>ii. சூழமைவுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறன் (Situational questions)<br>iii. ஆற்றல் (Competency questions) | 01<br>01<br>03 | 05 |
| | **மொத்தம்** | | 50 |

ii. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்)**

| *தொடரி லக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இரசாயனவியல், கணினிப் பொறியியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் பொறியியல், திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளிலான முதுமானிப் பட்டம்.<br>1. ஆராய்ச்சி அடிப்படையிலானது<br>2. பாடநெறி அடிப்படையிலானது<br>(அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாகப் பெறப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) | 15<br>10 | 15 |

| *தொடரி லக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 02 | **துறை சார்ந்த தொழிற்துறைத் தகைமைகள்:**<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட எண்மின் நூலக முகாமைத்துவம், எண்மின் பதிவுகள் முகாமைத்துவம், எண்மின் பதிவுப் பேணுகை, காப்பக ஆவண முகாமைத்துவம், பதிவுகள்முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br><br>1. முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. முதுமாணிப் பட்ட டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>3. பட்டப்படிப்பு ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது காப்பக ஆவண முகாமைத்துவத்துடன் தொடர்புடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்ட எண்மின் நூலக முகாமைத்துவம், எண்மின் பதிவுகள் முகாமைத்துவம், எண்மின் பதிவுப் பேணுகை, காப்பக ஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br>1. டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்காக (குறைந்த பட்சம் 36 மணித் தியாலங்கள்) | <br><br><br><br><br><br><br><br><br>15<br>10<br>08<br><br><br><br><br><br><br><br><br><br><br>04<br>02 | 15 |
| 03 | **துறை சார்ந்த தொழிற்துறை அனுபவங்கள் :**<br>i. கணினி மென்பொருட்களை வடிவமைப்பதில் உள்ள அனுபவம் ஒரு மென்பொருளுக்கு 05 புள்ளிகள் வீதம் (பதிப்புரிமைச் சான்றிதழ் அல்லது காப்புரிம உரிமம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).<br>ii. கணினி அறிவியல், கணினிப் பொறியியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் பொறியியல், எண்மின் நூலக முகாமைத்துவம், எண்மின் பதிவுகள் முகாமைத்துவம், எண்மின் பதிவுப் பேணுகை, காப்பக ஆவண முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் அல்லது முதன்மைப் பொறுப்பை வகித்த பதவியொன்றில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் (தொடர்புடைய நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இச்சான்றிதழில் சேவை ஆரம்பிக்கப்பட்ட/ நிறைவடைந்த திகதிகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றாராயின் அது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)<br>(அதிகபட்ச தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | 15 |

| *தொடரி லக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 04 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள்**<br>i. பதவியின் பங்களிப்பை ஆற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரரின் பலங்கள் (Strengths questions)<br>ii. சூழமைவுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறன் (Situational questions)<br>iii. ஆற்றல் (Competency questions) | <br>01<br>01<br>03 | 05 |
| | **மொத்தம்** | | 50 |

iii. **தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல)**

| *தொடரி லக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கலைமாணி, கட்புலக் கலைகள், நுண்கலைகள், திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளிலான முதுமானி பட்டம்<br>1. ஆராய்ச்சி அடிப்படையிலானது<br>2. பாடநெறி அடிப்படையிலானது<br>(அடிப்படைக் கல்வித் தகைமைக்கு மேலதிகமாகப் பெறப்பட்டுள்ள தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) | 15<br>10 | 15 |
| 02 | **துறை சார்ந்த தொழிற்துறைத் தகைமைகள் :**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் அறிவியல்,பதிவுகள் முகாமைத்துவம், காப்பகஆவண முகாமைத்துவம், செவிப்புல - கட்புல காப்பகஆவண காப்பு ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br>1. முதுமாணிப் பட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. முதுமாணிப் பட்ட டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>3. பட்டப்படிப்பு ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது காப்பகஆவண முகாமைத்துவத்துடன் தொடர்புடைய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் அறிவியல், பதிவுகள் முகாமைத்துவம், காப்பகஆவண முகாமைத்துவம், செவிப்புல -கட்புல காப்பகஆவண காப்பு ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு (அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br>1. டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்<br>2. சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்காக (குறைந்தபட்சம் 36 மணித்தியாலங்கள்) | 15<br>10<br>08<br>04<br>02 | 15 |

| *தொடரி லக்கம்* | *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *புள்ளிகள்* | *அதிபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | **துறை சார்ந்த தொழிற்துறை அனுபவங்கள் :**<br>செவிப்புல – கட்புல காப்பக ஆவண காப்பு, தகவல் முகாமைத்துவம், பதிவுகள் முகாமைத்துவம், காப்பகஆவண முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் அல்லது முதன்மைப் பொறுப்பை வகித்த பதவியொன்றில் பெற்றுக்கொண்ட சேவை அனுபவத்திற்கு ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதம் (தொடர்புடைய நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட சேவைச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இச்சான்றிதழில் சேவை ஆரம்பிக்கப்பட்ட/ நிறைவடைந்த திகதிகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு வருகின்றாராயின் அது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.) | 15 | 15 |
| 04 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் :**<br>i. பதவியின் பங்களிப்பை ஆற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரரின் பலங்கள் (Strengths questions)<br>ii. சூழமைவுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் திறன் (Situational questions)<br>iii. ஆற்றல் (Competency questions)<br>ஆகிய விடயங்களை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்ட வினாக்களுக்கு வழங்கப்படும் பதில்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | <br>01<br><br>01<br>03 | 05 |
| | **மொத்தம்** | | 50 |

**கவனத்திற் கொள்ளவேண்டியது:**

தகைமைக்கான நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்வதானது, நியமனம் ஒன்றை வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்த ஒன்றாகக் கருதப்பட மாட்டாது

12. **பரீட்சை நிபந்தனைகள்:**

I. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தான் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் இத்தேர்வின் அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழியூடகத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

II. பரீட்சைக் கட்டணம் ரூபா 1200 ஆகும். மேலும், அந்தப் பரீட்சைக் கட்டணத்தை “தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகம்” எனும் பெயரில் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையிலுள்ள 086-1001-3902-6218 எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்து, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பின் ஊடாக விண்ணப்பப்பத்திரத்தின் குறித்த இடத்தில் கழராதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும் மாட்டாது. (பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

III. இப்பரீட்சையானது கொழும்பில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

IV. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்பத்திரங்களும், அதேபோன்று அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பப்பத்திரங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

V. விண்ணப்பப்பத்திரமானது செ.மீ. 21.0 × 29.7 (A4) அளவுள்ள தாள்களில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு இணங்க அமைந்திருத்தல் வேண்டும். 01 தொடக்கம் 06 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும், 07 தொடக்கம் 08 வரையான தலைப்புகள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சியவை 3 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்குரிய தகவல்கள் தனது

சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க அமையாத விண்ணப்பங்களும், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தொடர்புடைய விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும். விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித ஆவணத்தையோ அல்லது அதன் பிரதியையோ இணைக்கக் கூடாது.

VI. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன், அது பற்றிய அறிவித்தல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.slida.lk) வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் எவரேனும் இருப்பின், அந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பரீட்சைக் கிளையின் 011-5980264 அல்லது 011-5980255 ஆகிய தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை அது குறித்து வினவ முடியும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர் , விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை திருத்தமாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அதேபோன்று, பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அது குறித்து அறிவிக்கும் குறுஞ்செய்தி (SMS) ஒன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்படும்.

VII. அரசாங்க சேவை/ மாகாண அரசாங்க சேவை மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமாகும். நிறுவனம் ஒன்றின் ஊடாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் ஒருவர், தனது கையொப்பத்தைத் தான் கடமையாற்றும் நிறுவனத்தின் தலைவரிடம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத ஏனைய விண்ணப்பதாரர்கள், அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவர்/ ஓய்வுபெற்ற தலைவர் ஒருவர், கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், ரூபா 240,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண சபைகள் சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பான மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்ட ஒருவர் ஆகியோரில் எவரேனும் ஒருவர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

VIII. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பரீட்சையை ஒத்திவைப்பதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

13 **பரீட்சைக்கு தோற்றுதல் :**

I. சகல விதத்திலும் முழுமைப்படுத்திய விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

II. பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில், தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டபப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**குறிப்பு :** பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்தவராகக் கருதப்பட மாட்டார்.

III. பரீட்சார்த்தி/ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

i. ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

IV. அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

14. **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

15. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். அப்பரீட்சை விதிமுறைகளை மீறுகின்ற பட்சத்தில் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாக நேரிடும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

17. இவ்விதிமுறைகளில் கருத்திற் கொள்ளாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்பட்டு தேசிய ஆவணக்காப்பகப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

18. **பரீட்சைப் பெறுபேறுகள் :**

விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சைப் பெறுபேறுகளை அறிவித்தல், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.

2026, ஓகத்து 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**தேசிய சுவடிகள்கூடத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகையைச் சேர்ந்த தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (மின்னணு பதிவுகள் மற்றும் எண்ணிமமயமாக்கல்) மற்றும் தேசிய ஆவணக்காப்பக உதவிப் பணிப்பாளர் (திரைப்படங்கள் மற்றும் செவிப்புல - கட்புல) ஆகிய பதவிகளின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

**Open Competitive Examination for the Recruitment to the Grade III posts of National Archives Assistant Director (Technical), National Archives Assistant Director (Digital Records & Digitization), National Archives Assistant Director (Films & Audio Visual) in the Department of National Archives - 2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி / பதவிகள் :

| தெரிவுகள் | பதவி இலக்கம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |

(வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தி பிரகாரம் இலக்கமிடவும்.)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ..........................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA) ..........................................

1.2 இறுதியில் இடப்படும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் குறிப்பிடவும்

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ..........................................

(உதா: GUNAWARDHANA, H.M.S.K.) ..........................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................
..........................................

02. 2.1 நிரந்தர வதிவிட முகவரி : ..........................................

(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ..........................................

2.2 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..........................................
..........................................

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

04. பால் நிலை : பெண் /ஆண் பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்) ஆண் - 0

05. பிறந்த திகதி :

(அ) ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி: | | |

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

06. 6.1 கையடக்கத் தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

6.2 மின்னஞ்சல் முகவரி : ..........................................................................................

07. கல்வித் தகைமைகள் :

i. பட்டப்பின் பட்டம்: ..........................................................................................................

ii. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ..........................................................................

iii. பதிவிலக்கம் : ..........................................................................................................

iv. பட்டம் செல்லுபடியாகும் திகதி : .........................................................

(ஆ) i. சாதாரண பட்டம் : ..........................................................................................................

ii. பல்கலைக்கழகம் / நிறுவனம் : ..........................................................................

iii. பதிவிலக்கம் : ..........................................................................................................

iv. பட்டம் செல்லுபடியாகும் திகதி : .........................................................

(இ) க.பொ.த (உ/தர)

பரீட்சைக்கு தோற்றிய வருடம் : [ ]

பரீட்சை சுட்டிலக்கம் : [ ]

| *பாடம்* | *சித்திகள்* | *பாடம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(ஈ) க.பொ.த (சா/த) - இரண்டாம் தடவை

பரீட்சைக்கு தோற்றிய வருடம் : [ ]

பரீட்சை சுட்டிலக்கம் : [ ]

| *பாடம்* | *சித்திகள்* | *பாடம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

08. பரீட்சைக் கட்டணம் ( பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

i. செலுத்தப்பட்ட வங்கி : ..........................................................................................

ii. செலுத்திய தொகை :..........................................................................................

iii. செலுத்திய திகதி : ..........................................................................................

iv. பற்றுச்சீட்டு இலக்கம் : ..........................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) |

09. விண்ணப்பதாரியின் சான்றுரை/ சான்றிதழ் :

இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானது என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

திகதி:....................................... ...........................................
கையொப்பம்

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் : (ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்பிக்கின்ற திரு. / திருமதி/ செல்வி .................................................... ஆகிய நபரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் .......................................... ஆம் மாதம் ............ ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் : .......................................................................................

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ............................................................................................

பதவி : ……………………………………………………….…….…

முகவரி :………………………………………………………..

(உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை)

திகதி : ..................................................................................

**குறிப்பு** : விண்ணப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 12 ஆம் பந்தியில் (VII) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

11. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :
(அரசாங்க நிறுவனம் ஒன்றின் ஊடாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்.)

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு. / திருமதி / செல்வி ...................................................................... ........ என்பவர் இவ்வமைச்சில் / திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

..................................................................................
உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி : ..............................................................................
நிறுவனத் தலைவரின் பெயர் : ..............................................................................
பதவி : ..............................................................................
சேவை நிலையத்தின் முகவரி : ..............................................................................

08-384

## இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2026

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளில் நிலவும் 40 வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் பூர்த்தி செய்வதற்கு நடாத்தப்படும் மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணைத்தளத்தின் "Our Services'' கீழுள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களைநிகழ்நிலை(Online)மூலம்மட்டுமே சமர்பிக்கலாம். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்வது 2026, ஒகத்து மாதம் 31 ஆம் தினம் மு.ப.9.00க்கு திறக்கப்படும் என்பதுடன், 2026, செத்தெம்பர் மாதம் 30 ஆம் தினம் பி. ப. 9.00 க்கு முடிவடையும்.

உத்தியோகத்தர்கள்விண்ணப்பப்படிவத்தின்பிரதியொன்றை தமது தனிப்பட்ட கோப்பில் இணைப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் இறுதி தினம் வரையில் தாமதம் செய்வதினால் ஏற்படும் எந்தவொரு எதிர்நிலையினையும் விண்ணப்பதாரரினால் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இப் பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதி ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு , பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் திசெம்பர் மாதம் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ளது. இப் பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச்செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டவகையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

01. இவ் அறிவித்தலிலுள்ள சொற்பதங்களான

அ. "செயலாளர்" எனும் பதம் "பொது நிர்வாக அமைச்சின் விடயப் பொறுப்பு செயலாளர்" எனப் பொருள்படும்

ஆ. "சேவை" எனும் பதம் வேறு எவ்விதத்திலும் விசேடமாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் ''இலங்கை நிர்வாக சேவை" எனப் பொருள்படும்.

02. இப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவது இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்காகவாகும்.

(அ) எழுத்துப் பரீட்சை:

இப் பரீட்சையானது பின்வரும் நான்கு (04) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

i. பொது விவேகம்

ii. இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும்

iii. அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை)

iv. அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது)

(ஆ) நேர்முகப் பரீட்சை: எழுத்துப் பரீட்சையின் அனைத்துப் பாடங்களிலும் பெற்ற புள்ளிகளின் மொத்தப் புள்ளிகளின் பிரகாரம், அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகைமை பெறுவர்.

இவ் பொது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் படுவது, பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 25%மான எனும் அளவொன்று ஆகிய இரண்டினது கூட்டுத்தொகையாக பெறப்படும் எண்ணிக்கை மட்டுமாகும். நேர்முகப்பரீட்சை நடாத்தும் திகதி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் செயலாளரின் மூலம் தீர்மானிக்கப்படும்.

03. இப்பதவிக்காக நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். ஏதேனுமொரு வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு. இறுதி வெற்றிடத்திற்காக அல்லது இறுதி சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள், வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வெற்றிடங்களை நிரப்புவது

தொடர்பான தீர்மானம் நடைமுறை விதிக் கோவையின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.

04. **சேவை நிபந்தனைகள்:**

04.1 அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1842/2 மற்றும் 2013.12.23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவ் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக்கோவையின் நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் கீழ் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

04.2 இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

04.3 நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதிக்குஉட்பட்டதாகும்.சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்த திகதியிலிருந்து 03 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது சித்தியெய்தப்படல் வேண்டும்.

04.4 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து மூன்று (03) வருடங்கள் கழிவதற்கு முன்னர் அரசகரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

04.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி அதிகாரம் உண்டு.

05. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

இலக்கம் 10/2025 இனைக் கொண்ட 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 82,150.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூபா 195,970.00 (SL-1-2025) ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் தங்களுக்கு உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி :**

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ii) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்

(iii) நாட்டின் எப் பகுதியிலும் சேவையாற்று வதற்கான உள மற்றும் தேகாரோக்கியத் துடனும் இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

இலங்கையின் பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று

மற்றும்

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்.என். 2-2016 அல்லது அதற்கு மேற்பட்ட எம்.என். சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்.எல். 1-2016 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட முனைப் பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்

அல்லது

(ii) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்.என். 2-2016 அல்லது அதற்கு மேற்பட்ட எம்.என். சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்.எல்.1-2016 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில் / பதவியில் குறைந்தபட்சம் பத்து (10) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல்

குறிப்பு:

1. பட்டம் செல்லுபடியாகும் திகதியானது, தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதி அன்றோ அல்லது அதற்கு முந்தைய திகதியாகவோ இருத்தல் வேண்டும்.

   பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது 2018.07.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும்

2. மேற்குறிப்பிடப்பட்ட சேவைக் காலத்தைக் கணிப்பிடும் போது அரசாங்க சேவையில் அத்துடன் / அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள தொடர்ச்சியான சேவைக்காலத்தின் மொத்தமானது கருத்திற்கொள்ளப்படும்.

3. 2013.12.23 ஆம் திகதிக்கு சம்பளக் குறியீட்டு இலக்கம் MN 2-2006 அல்லது அதற்கு மேற்பட்ட MN சம்பளக் குறியீடுகளின் கீழ் சம்பளம் பெற்று, பின்னர் அச்சம்பளக் குறியீடுகள் வேறொரு சம்பளக் குறியீட்டிற்கு திருத்தம் செய்யப்பட்ட சேவையொன்றில், மேற்படி (ஆ) (i) அல்லது (ஆ) (ii) இன் கீழ் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் இதற்குத் தகைமை பெறுவர்.

(இ) வயது மற்றும் பூர்த்திசெய்திருக்க வேண்டிய ஏனைய தகைமைகள்

(i) தகைமையை பூர்த்தி செய்யும் திகதியன்று வயதெல்லை ஐம்பத்து மூன்று (53) வருடத்திற்கு மேற்பட்டதாக இருத்தலாகாது. அதற்கிணங்க 1973.08.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி அமைந்திருக்கும் ஆட்களுக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதற்கான தகைமை காணப்படுகின்றது.

(ii) மேலே 6 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சேவை/ பதவி ஒன்றில் நிரந்தரப் பதவி உறுதித் தன்மையைப் பெற்றிருத்தல் வேண்டும்

குறிப்பு :

இதுவரை குறித்த நியமன அதிகாரியால் சேவையில் நிரந்தரப்படுத்துவதற்குரிய கடிதம் வழங்கப்படவில்லையாயினும் பரீட்சை அறிவித்தல் 06ஆம் பந்திக்கு ஏற்ப பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவசியமான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள மற்றும் குறித்த சேவைப் பிரமாணம் / ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப சேவையில் நிரந்தரப் படுத்துவதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஆயினும் அவ் அலுவலர்கள்

(1) சேவையில் உறுதிப்படுத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய திகதியில் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(2) அவ் அலுவலர்கள் இப் பரீட்சையில் சித்தியடைந்து சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெறுவாராயின் நேர்முகப் பரீட்சைக்கு உட்படும் சந்தர்ப்பத்தில் சேவையில் உறுதிப்படுத்தல் கடிதத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாகும். (உறுதிப்படுத்தல் திகதி தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய திகதி அல்லது அதற்கு முன்னராக வலுவிலிருத்தல் வேண்டும்.)

(iii) தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதியன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது

(iv) உடன் முன்வரும் 05 வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்களை குறித்த திகதியில் உழைத்திருத்தல் வேண்டும்

(ஈ) **தகைமைகள் பற்றிய வரையறைகள்**

i. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு மூன்று (03) தடவைகளுக்கு மேல் தோற்ற எந்தவோர் பரீட்சார்த்தியும் அனுமதிக்கப்பட மாட்டார். (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் விண்ணப்பதாரர்கள் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற் கொள்ளப்படுவதில்லை.)

ii. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள் வர்த்தமானி அறிவித்தல்

வெளியிடப்படும் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

07. **பரீட்சைக் கட்டணம்:**

இப்பரீட்சையின் பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை முறைமையினால் மூலம் வழங்கப்படும் கீழ்வரும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)

(ii) நிகழ்நிலை கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with Internet Payment facility)

(iii) இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறை / Flex செயலி மூலம் (Bank of Ceylon Online Banking Method)/ Flex App

(iv) எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு: மேற்படி முறைகள் மூலம் கொடுப்பனவினை மேற்கொள்ளக்கூடிய விதம் தொடர்பான அறிவுரைகள் பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழிநுட்ப ஆலோசனையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

v. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டிருப்பின் விண்ணப் பப்படிவம் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

08. **விண்ணப்பிக்கும் முறை:**

(அ) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழி மூலம் மட்டும் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப் பதாரரினால் நிகழ்நிலை மூலம் முன்வைக்கப் பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டதாக / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என முறைமைக்குஉட்செல்லபயன்படுத்தும்கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண் ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள அறிவுரைப் பத்திரத்தைப் (Instruction) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது, இவ் அறிவுரைகளைக் கண்டிப்புடன் கடைப் பிடிக்கவும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன் றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்னர் அதில் செய்யப்படும் எவ்வித திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப் படாத மற்றும் விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(இ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப் படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுசீட்டுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலையினூடாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிடம் பரீட்சை ஆணை யாளரால் நிகழ்நிலையினூடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்ட உடன் அதனை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தின் மூலம்/ விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ் செய்தியி னூடாகவும் அறிவிக்கப்படும். தமது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சாத்தியொருவர் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்படும்படி அது தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம்

மற்றும் விலாசத்தினை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பொருத்தமானது. அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் புகைப்பட பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் கிடைத்த பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பதும் பிரயோசனமானதாகும். அனுமதி அட்டையைப் பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின், நேரகாலத்துடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/ நேர்முகப் பரீட்சையில் திருத்தங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

09. **பரீட்சைக்கு அனுமதித்தல்:**

(அ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப்பத்திரம், கையொப்பத்தை முற்கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களை பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச் சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டி ஏற்படும். "பரீட்சை முடிவுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது."

குறிப்பு :

பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, பரீட்சையில் தோற்றுவதற்காக மட்டுமே அன்றி தகைமைகளை பூர்த்தி செய்வதற்கான தகைமையாக கருதப்படாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளம் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்ட பத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரை பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரர்களை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

11. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை:**

எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வேண்டுமென்றே பிழையான தகவல்களை அளித்துள்ளார் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் அரச சேவையிலிருந்து பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

12. இவ்ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

13. பரீட்சைத்திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்

(அ) இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் நியமன மொழி மூலமாகக் கருதப்படும்.

குறிப்பு:

(I) பரீட்சார்த்தி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சை யின் சகல வினாத்தாள்களிற்கும் தோற்றுதல் வேண்டும்.

(II) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட் சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

14. **ஆட்சேர்ப்பு முறை :**

14.1 **எழுத்துமூலப் பரீட்சை** :

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சைத் தாள்கள் 04 இனை உள்ளடக்கியிருக்கும். ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளவேண்டிய குறைந்தபட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு:-

| | *பாடம்* | *புள்ளிகள்* | *குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1 | பொது விவேகம் | 100 | 50 |
| 2 | இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் | 100 | 50 |
| 3 | (03) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) | 100 | 50 |
| 4 | அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II ( ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடல் சம்பந்தமாக) | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

14.2 **பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

i. நேர்முகப் பரீட்சையானது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என இரண்டு (02) பகுதிகளைக் கொண்டுள்ளது.

(அ) **பொது நேர்முகப் பரீட்சை**

(i) மேற்படி இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளனவா எனவும் மற்றும் தகுதி தொடர்பான வரையறைகளுக்கு விண்ணப்பதாரிகள் இணங்கி யொழுகின்றனரா எனவும் உறுதிப்படுத்துவதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

i. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவொன்றின் மூலம் பரீட்சார்த்திகளின் முகாமைத்துவத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆளுமை என்பவற்றை அளவிடுவதற்கு பின்வரும் நடைமுறையுடன் ஒத்திசைவாக நடாத்தப்படும். இந்நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் இருபத்து ஐந்து (25) ஆகும்.

| | *விடயத் தலைப்பு* | *உச்சப் புள்ளி* |
|---|---|---|
| 1 | முகாமைத்துவத் திறன் | 10 |
| 2 | தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3 | தொடர்பாடல் திறன் | 05 |
| 4 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

ii. ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது ஐம்பது (50%) புள்ளி களைப் பெற்ற பரீட்சார்த்திகளில் சகல பாடங்களிற்கும் மொத்தமாக உச்ச புள்ளிகளைப் பெறுகின்ற வர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெறுவர். தகைமை பெற்ற விண்ணப்பதாரர் களுள் பொது நேர்முகப் பரீட் சைக்கு, பூர்த்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்படும் வெற்றிடங் களின் எண்ணிக்கை மற்றும் அவ் வெற்றிடங்களின் எண்ணிக்கை யில் 25% மான அளவு ஆகிய இரண்டினதும் கூட்டுத் தொகையாக பெறப்படும் எண்ணிக்கையொன்று மட்டுமே அழைக்கப்படுவர். தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் எண் ணிக்கையானது மேலே குறிப் பிடப்பட்ட எண்ணிக்கையினை தொடவில்லையாயின் அவ்வாறு தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் அத் தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

iii. தகைமைகளைப் பரீட்சிப்பதற்கு கட் டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட் சைக்கு முன்னராக பொது நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும் என்பதுடன் அங்கே எதுவித புள்ளி களும் ஒதுக்கப்படமாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட் சேர்ப்பதற்கான சகல தகைமை களையும் பூர்த்தி செய்துள்ளதனை உறுதிப்படுத்திய விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட் சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறுவர். குறித்த சில எண் ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்ட மைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதிப்படுத்தப் படாவிட்டாலுங்கூட ஏனைய பரீட் சார்த்திகள் அவ்வாறு தகுதிப்படுத்தப் படாதவர்களின் இடத் துக்காக பொது நேர்முகப் பரீட்சைக்கு மீண்டும் அழைக்கப்பட மாட்டார்கள்.

iv. நிலவும்வெற்றிடங்களுக்கிணங்க நிய மிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட் சார்த்திகளின் எண்ணிக்கையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்ட மைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளப் பட்ட மொத்தப் புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம்பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்கவும்:**

நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளித் தலானது நியமனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற சகல தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படலாகாது

14.3. நியமன அதிகாரியின் மூலம் முடிவுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவித்து அனுப்பிய பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகள் குறிப்பிட்ட பெறுபேற்று குறிப்பொன்றினை, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையதளத்தின் ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

15. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்:**

(01) **பொது விவேகம்:**

எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள், இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிவுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம்: 1 ½ மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

(02) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும்

இலங்கை மற்றும் உலகளாவிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலமைகள் பற்றிய பரீட் சார்த்தியின் விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சிக்கல்களுடன் தொடர் புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக

மற்றும் விமர்சன ரீதியான சிந்திக்கும் ஆற்றல், முந்துரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம்: 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்கள் மற்றும் கட்டுரை வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

(03) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை)

அரசாங்க சேவையில் வேறுபட்ட சுற்றுச்சூழல்களில் தோன்றக்கூடிய சிக்கலொன்றை அல்லது ஒரு சிலவற்றை தொடர்புபடுத்திக் கொண்டு உருவாக்கப்பட்ட சம்பவமொன்றை / சம்பவங்களை பரீட்சார்த்தியிடம் முன்வைத்து பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆக்கபூர்வமான சிந்தனை சக்தியையும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஆற்றலையும் தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுடன் தொடர்புடையதாக அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்ததாக அளவிடுதலே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம்: 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் வினாக்கள் மற்றும் கட்டுரைகள் வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(04) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II ( ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடல் சம்பந்தமாக)

தரப்பட்ட தலையங்கங்கள் / தொனிப் பொருள்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்யும் ஒரு தலையங்கம் / தொனிப்பொருட்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துகளைத் தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம்: 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கையொப்பம்
எஸ். ஆலோக பண்டார,
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2026, ஓகத்து மாதம் 21.

08-382

## விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

## ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லா வகுதி 2 சேவை தொகுதியின் III ஆம் தரத்தின் விடுதி காப்பாளர் பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லா வகுதி 2 சேவை தொகுதியின் விடுதி காப்பாளர் பதவியில் 2024.12.31 ஆம் திகதி அன்று நிலவிய பதவி வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பதாரரது வயது 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதினை விஞ்சிவிடாதும் இருத்தல் வேண்டும். அதற்கு அமைய வயது தொடர்பான தகைமையை பூர்த்தி செய்வது விண்ணப்பதாரரது பிறந்த திகதி 2008.09.28 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.09.28 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு பின்னர் அமைந்திருத்தல் வேண்டும்.

03. இப்பதவியின் பொருட்டு 2025.03.25 ஆம் திகதிய இலக்கம் 10/2025 இனைக் கொண்ட பொ.நி.சு. MN-1 2025 எனும் சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரித்தாகுவதுடன் அதற்கு அமைய ரூபா 45,230.00 - 10 X 540 - 11 X 630 - 10 X 1190 - 78,360.00 ஆக காணப்படுவதுடன் அச்சம்பள அளவுத்திட்டம் உமக்கு உரித்தாகுவது 2027.01.01 ஆம் திகதி முதலாகும். நியமனம் செயல்லலுப் பெறும் திகதி முதல் உங்களுக்கு இச்சுற்றறிக்கையின் உப அட்டவணை III இல் உள்ள ஒழுங்குமுறைக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

04. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித் துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான திர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு, தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வகையில் நாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

05. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யன்று விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல அடிப்படைக் கல்வித் தகைமையையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருப்பது கட்டாய மாகும்.

**அடிப்படை கல்வித் தகைமைகள்**

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த.(உ/தரப்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்திலேனும் (பொது அறிவு பாடத்தை தவிர்த்து) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்** : ஏற்புடையதன்று.

**அனுபவம் :**

தங்குமிட விடுதி நிர்வாகம் மற்றும் நடாத்திச் செல்லல், உணவு வழங்குதல், அதற்கு உரிய கணக்குகளை வைத்திருத்தல் தொடர்பாக அரச/கூட்டுத்தாபனம் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்/பாடசாலை வதிவிடம் வாடி வீட்டில் 01 வருட அனுபவம் இருப்பதற்கான சான்றிதழ்.

**ஏனைய**

(i) விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் உட்பட உரிய தகைமைகளையும் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில்/வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி அன்று சகல விதத்திலும் கொண்டிருந்தால் மாத்திரமேயாகும்.

06. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 (21cm x 29cm) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 7 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், பந்தி இலக்கம் 08 இரண்டாவது பக்கத்திலும் இலக்கம் 09 முதல் 11 வரை மூன்றாம் பக்கத்திலும் மற்றும் ஏனைய பந்திகள் முறையாக அடுத்தடுத்த பக்கங்களிலும் உட்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கு உரிய தகவல்களை தமது கையெழுத்தினாலே மிகத்தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும் விண் ணப்பப்படிவங்களை தாம் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்திலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் தயார் செய்கையில் அங்கு தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2026.09.28 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், 1095, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை கெடம்பே, பேராதனை" எனும் முகரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(ஈ) பரீட்சை கட்டணமாக ரூபா 1000.00 இனை காசுக் கட்டளை மூலம் ஏற்றுமதி விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேராதனை தபாற் பணிமனையில் மாற்றத்தக்கவாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொரு தபால் பணிமனை, உப தபால் பணிமனை ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அந்த காசுக்கட்டளையை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். அதன் நிழற்படப் பிரதி ஒன்றினை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். இந்த பரீட்சைக் கட்டணத்திற்குப் புறம்பாக எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதை அறியத் தருகின்றேன். பரீட்சைக்காக செலுத்தப்படுகின்ற கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கவோ அல்லது வேறு ஒரு பரீட்சையின் பொருட்டு மாற்றம் செய்வதற்கோ முடியாது.

(உ) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப் படாத விண்ணப்பங்கள் மற்றும் சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் தபாலிடுகையின் போது காணாமல் போதல், தாமதமாதல் போன்றன தொடர்பில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பொறுப்புச் சொல்ல மாட்டாது. ஆகவே விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்பதற்கு முன்னர் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய உள்ளதா எனவும் மற்றும் சகல தகவல்களையும் உட்படுத்தி விண்ணப்பப்படிவம் சரியாக பூரணப் படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும், உரிய பரீட்சைக் கட்டணத்திற்கான காசுக்கட்டளை இணைக்கப்பட்டு அவ்விடயங்கள் விண்ணப்பத்தில் உட்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மீள கவனத்திற் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய காசுக்கட்டளையின் நிழற்படப் பிரதி யையும் தம்வசம் வைத்திருப்பதானது பயன் மிக்கதாகும்.

(ஊ) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சையின் பொருட் டான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரது மாதிரி கையொப்பத்தை சான்றுபடுத்தி இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமது நிறுவன தலைவரின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியினால் சான்றுபடுத்துதல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபரினால், தொகுதி கிராம அலுவலரினால் சமாதான நீதவானினால், சத்தியப்பிரமாண ஆணை யாளரினால், சட்டத்தரணி, நொத்தாரிஸ், முப்படை அதிகாரி அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவை அல்லது நிரந்தர பதவிநிலை தரத்தில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தி இருத்தல் வேண்டும்.

- **பிழையான தகவல்கள் பொருட்டான தண்டனை** :

விண்ணப்பப்படிவத்தை நிரப்புகையில் மிகவும் கவனமாக சரியான தகவல்களை மாத்திரம் வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய விண்ணப்பதாரர் எவரேனும் ஒருவர் தகைமையற்றவர் என தெரிய வந்தால் அவர் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதாவது சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சாரத்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரரினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் பின்னர் ஒரு காலத்தில் பிழையானது என தெரியவரின் அல்லது அவர்/அவள் வேண்டுமென்றே ஏதெனும் ஒரு தகவலை மறைத்து இருப்பது தெரியவரின் அல்லது அவருக்கு/அவளுக்கு மேலும் நியமனம் வழங்குவது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இப்பரீட்சையை காரணமாகக கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனத்தை நிராகரிப்புச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவையில் இருந்து நீக்கிவிடுவதற்கும் உட்பட்டதாகும்.

07. **பரீட்சை முறை :**

(அ) பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்துள்ளனர் எனும் எடுகோளின் கீழ் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கு உரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். தகைமையை பூரணப்படுத்தப்படாது உள்ள விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சையின் பொருட்டு அமருகின்ற போது தமக்கு உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொறு விண்ணப்பதாரருக்கும் பரீட்சையில் அமருவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(ஆ) இந்தப் பரீட்சை கண்டியில் மாத்திரம் நடைபெறும், விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டதும் அது தொடர்பாக குறிப்பிட்டு அறிவித்தல் ஒன்று ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் உத்தியோகபூர்வ இணையதள முகவரியில் வெளியிடப்படும்.

(இ) அறிவித்தல் வெளியிடப்பட்டு 04 அஅல்லது 05 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய அது தொடர்பாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு அறியக் கொடுத்தல் வேண்டும் (தொலைபேசி இலக்கம் 0812068381)

(ஈ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தம்வசம் வைத்திருப்பது மிகவும் பிரயோசனமாக அமையும்.

i. பரீட்சையின் பெயர்
ii. விண்ணப்பதாரரது முழுப் பொர்
iii. முகவரி
iv. விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவு செய்யப்பட்ட தபால் பணிமனை மற்றும் இலக்கம்
v. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் இலக்கம் திகதி மற்றும் தபால் பணிமனை.

(உ) பரீட்சைக்கு அமருவதற்காக விண்ணப்பதாரரால் மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்துச் செலவோ அல்லது வேறு எந்த ஒரு கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(ஊ) ஆளடையாளம் - பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது
(ii) ஏற்றுக் கொள்ளக்கூடிய கடவுச்சீட்டு அல்லது
(iii) ஏற்றுக் கொள்ளக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் உரிய ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கு இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் மின் சாதனங்கள் அணிந்து இல்லை என்பதை உறுதி செய்வதன் பொருட்டு காதுகளை மூடாது பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்தல் வேண்டும் அவ்வாறே நமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிக்க தவரும் பட்சத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(எ) **பாடத்திட்டம்.**

| *பாட இலக்கம்* | *பாடங்கள்* | *நேரம் (மணி)* | *உச்சப் புள்ளி* | *சித்தியெய்தும் புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | விவேகப் பரீட்சை | 1 1/2 | 100 | 40% |
| 02 | விடய அறிவை மதிப்பிடும் திறனாய்வு பரீட்சித்தல் | 1 1/2 | 100 | 40% |

(i) **விவேகப் பரீட்சை :**

மொழிரீதியான, கணிதரீதியான மற்றும் தர்க்கிக்கும் இயலுமை போன்றவற்றை மதிப்பீடு செய்வதற்கான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியதாக அமையும்.

(ii) **விடய அறிவை மதிப்பிடும் திறனாய்வினை பரீட்சித்தல் :**

பதவிக்கு உரிய விடயங்களை உள்ளடக்கியதாக தயார் செய்யப்பட்ட சிறு வினாக்களைக் கொண்டு அமைந்ததாகும்.

(ஏ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். அத்துடன் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர் உரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

**08. வெற்றிட எண்ணிக்கை மற்றும் சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

i. வெற்றிட எண்ணிக்கை 01 ஆகும். இவ்வெற்றிடம் நிலவுவது இத்திணைக்களத்தின் மாத்தளை ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் சேவை மீளாய்வு பயிற்சி நிலையம் எனும் முகவரியில் மாத்திரமாகும்.

ii. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவோர் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

**09. ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பொருட்டு உள்ள சகல வினாப்பத்திரங்களிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரரது மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசை ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிட எண்ணிக்கையின் ஐந்து மடங்கிற்கு சமனான தொகையினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் அதிக புள்ளிகளை பெற்றுக் கொள்கின்ற விண்ணப்பதாரர் பதவி வெற்றிடத்தின் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படுவார். (கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகள் வருமாறு)

| | *புள்ளிகள் வழங்கப்படும் துறை* | *உச்சப் புள்ளி அளவு* | *தெரிவு செய்வதற்காக கவனத்திற் கொள்ளப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதன்று |
| 2. | மேலதிக தொழிற் தகைமைகள் | 25 | |
| 3. | மேலதிக அனுபவம் | 30 | |
| 4. | மொழித் தேர்ச்சி | 10 | |
| 5. | கணினி அறிவு | 10 | |
| 6. | நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறன் | 05 | |
| | மொத்தம் | 100 | |

10. போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமையை கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இவ்வறிவித்தலுக்கு அமைய தகைமைகள் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் கொண்டிராமை தெரியவரின் நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவர் எனக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் அது தொடர்பாக நியமன அதிகாரியான ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரரும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. பரீட்சையை நடாத்துகின்ற போது மற்றும் பெறுபேற்றினை வெளியிடுவது தொடர்பில் விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் (விரிவாக்கல் மற்றும் பயிற்சி) அவர்களினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கு விண்ணப்பதாரர் உட்படுதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறுவோர்களுக்கு எதிராக ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கு இடையே ஏதாவது பொருந்தாத தன்மை காணப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது என கருத்திற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திகதி :

எம்.கே.எஸ்.ஆர்.டி.சமரசிங்க
ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஏறுமதி விவசாயத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லா வகுதி 2 சேவை தொகுதியின் III ஆம் தரத்தின் விடுதி காப்பாளர் பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

Open Competitive Examination for the Recruitment to the Post of Hostel Warden of Class III of the Management Assistant Non Technical Service Category in the Department of Export Agriculture

சுட்டெண் [ ]

(அலுவலக பயன்பாட்டிற்காக)

01. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : சிங்களம் 2

தமிழ் 3 [ ]

ஆங்கிலம் 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

02. பெயர்

2.1 முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) : ..........................................................................

(உதாரணம் : HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 இறுதியாக வரும் பெயர் ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியிலுமாக (ஆங்கில பேரெழுத்துக்களில் உதாரணம் GUNAWARDHANA H.M.S.K.) :

..........................................................................

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

..........................................................................

03. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................

3.1 நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) : ..........................................................................

3.2 தொலைபேசி இலக்கம் : கையடக்க [ | | | | | | | | | ]

பயன்பாட்டில் உள்ள (Whatsapp உடனான)

நிலையான [ | | | | | | | | | ]

3.3 மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

05. பால் : பெண் 1, ஆண் 0 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

06. குடியியல் நிலை : [ ]

விவாகமானவர் 2, விவாகமாகாதவர் 1 (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

07. பிறந்த திகதி :

7.1 வருடம் : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

7.2 **விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று வயது** :

(உதாரணம் : விண்ணப்ப முடிவுத் திகதி 2026.01.31 ஆயின் விண்ணப்பதாரர் 1996.01.31 மற்றும் 2008.01.31 ஆம் திகதிக்கு இடையில் பிறந்திருத்தல் வேண்டும்)

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

(அ) **க.பொ.த. (சா/த)ப் பரீட்சை**

வருடம் மற்றும் மாதம் : ................................................

சுட்டெண் : ................................................

மொழி மூலம் : ................................................

| | *பாடம்* | *பெற்ற தரம்* | | *பாடம்* | *பெற்ற தரம்* |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

(ஆ) **க.பொ.த. (உ/த)ப் பரீட்சை**

வருடம் மற்றும் மாதம் : ................................................

சுட்டெண் : ................................................

மொழி மூலம் : ................................................

| | *பாடம்* | *பெற்ற தரம்* |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

- அறிவித்தலில் 6(ஊ) பந்தியில் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் சான்றுபடுத்திய கல்விச் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க.

(இ) **அனுபவம்**

| *நிறுவனத்தின் பெயர்* | *சேவைக்காலம்* |
|---|---|
| | |
| | |

09. **பரீட்சைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் | : | |
| திகதி | : | |
| பணம் செலுத்திய தபால்/ உப தபால் பணிமனை | : | |
| செலுத்திய பணம் | : | |

| |
|---|
| காசுக் கட்டளையின் மூலப் பிரதியை இங்கு ஒட்டவும் (காசுக்கட்டளையின் மறுபக்க மேற்பகுதியில் மாத்திரம் கம் பூசி கழறாதவாறு இங்கு ஒட்டி விடவும்.) |

10. விண்ணப்பதாரரது உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் தன்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்வற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

மேலும் இந்தப் பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் முன் வைக்கப்படுகின்ற சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் நான் இணங்குகின்றேன்.

திகதி : .................................   ...........................................................
விண்ணப்பதாரரது கையொப்பம்

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுபடுத்தல்

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற ........................................................ என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ........................ ஆம் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி அப்பற்றுச் சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் சான்றுபகர்கின்றேன்.

திகதி : .................................   ...........................................................
கையொப்பத்தை சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது முழுப் பெயர் : ..........................................................................................

பதவி : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

(உத்தியோகபூர்வ இலட்சினையால் உறுதிப்படுத்தவும்)

12. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரினது சான்றிதழ்

மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி............................................ என்பவர் ............................ ......................................... அமைச்சில்/திணைக்களத்தில்/அலுவலகத்தில் சேவைப் புரிகின்றார் எனவும், அவரது சேவை திருப்திகரமானது எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உள்ளார் எனவும், இப்பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுமிடத்து அவர் தற்போத வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் சான்று பகர்கின்றேன்.

திகதி : .................................   ...........................................................
திணைக்களத் தலைவரது கையொப்பம்

சான்றுபடுத்தும் உத்தியோகத்தரது முழுப் பெயர் : ..........................................................................................
பதவி : ..........................................................................................
முகவரி : ..........................................................................................

(உத்தியோகபூர்வ இலட்சனை)

08-312

**திருத்தம்**

**பாதுகாப்பு அமைச்சு**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி (III ஆம் தரம்/ பயிற்சித் தரம்) பதவிக்காக ஆட்சேர்ப்பிற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

வளிமண்டலவியல் திணைக்களத்தில், தற்போது வெற்றிடமாக உள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அலுவலர் (III ஆம் தரம்/ பயிற்சித் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடைய வளிமண்டலவியல் திணைக்களத்தின் உள்ளக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவது தொடர்பாக, 2026.07.10 ஆந் திகதியிட்ட 2494 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 07-196/2 இல் வெளியிடப்பட்ட வெற்றிட அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

• 01.

ii. எழுத்துப் பரீட்சை - இந்தப் பரீட்சையில் 02 கேள்விகள் உள்ளடங்கும்.

I. கணிதம் குறித்த அடிப்படை அறிவு வினாத்தாள்

II. பதவி தொடர்பான அடிப்படை அறிவு வினாத்தாள்

• 13.

1. எழுத்துப் பரீட்சை - பாடம்.

02. பதவி தொடர்பான அடிப்படை அறிவு வினாத்தாள்

எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்

| *பாட எண்* | *பாடம்* | *கால அளவு* | *மதிப்பெண்கள்* | *தேர்ச்சி மதிப்பெண்கள் (குறைந்தபட்சம்)* |
|---|---|---|---|---|
| 01 | கணிதம் குறித்த அடிப்படை அறிவு வினாத்தாள் | 02 மணி நேரம் | 100 | 40 |
| 02 | பதவி தொடர்பான அறிவு வினாத்தாள் | 02 மணி நேரம் | 100 | 40 |

(ஆ) பதவி தொடர்பான அடிப்படை அறிவு வினாத்தாள்

இது கட்டுரை வடிவில் பதிலளிக்க வேண்டிய ஒரு வினாத்தாள் ஆகும். கொடுக்கப்பட்டுள்ள 07 கேள்விகளில் 05 கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். (மதிப்பெண்கள் 20 × 5 = 100)

ஏ.எல்.கே. விஜேமான்னகே,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2026.08.12.

08-322

## திருத்தம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2026

2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 2,500 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ‘இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" தொடர்பான அறிவித்தல் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகிறது.

I. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 7 (இ) வயது தொடர்பான பந்தி பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது.

2026.08.31 ஆம் திகதியன்று இருபத்திரண்டு (22) வயதுக்குக் குறையாதவராகவும் முப்பத்தைந்து (35) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய வயது தொடர்பான தகைமையானது விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2004.08.31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவும், 1991.08.31 ஆம் திகதியோ அல்லது அதற்குப் பின்னதாகவும் அமைந்திருப்பின் மாத்திரமே பூர்த்தி செய்யப்படுவதாக அமையும்)

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை 35 வயதாகும். (அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டு தண்டனை பெற்றிருக்கக் கூடாது.)

II. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.09.11 வரை நீடிக்கப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களும் அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என்பதுடன், தகைமைகள் பரிசீலிக்கப்படும் திகதியும் 2026.08.31 ஆம் திகதியாகவே மாற்றமின்றித் தொடரும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, ஓகத்து மாதம் 25.

08-386

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.